Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 28 வெள்ளிக்கிழமை (12.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 285
















# முதல்வர் வேட்பாளர் தெரிவில் கூட்டமைப்பில் கருத்து முரண்பாடு

## ஒத்திவைக்கப்பட்டது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக முதலமைச்சர் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட கூட்டம் பல்வேறு வாதப்பிரதிவாதங்களுடன் வேட்பாளரைத் தெரிவுசெய்யாமலேயே இழுபறியில் நிறைவடைந்தது.

கொழும்பில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று மாலை 5.00 மணிக்கு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது தேர்தல் நியமனக் குழுவும், நிதிக்குழுவும் பிரசாரக்குழுவும் நியமிக்கப்பட்டன. பின்பு முதலமைச்சர் வேட்பாளர் சம்பந்தமாக நீண்டநேரம் ஆராயப்பட்டது. ஓய்வுபெற்ற முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக வரவேண்டும் என்பதை இரா.சம்பந்தன் மிகவும் ஆணித்தரமாக ஆதரித்து நின்றார். அதேவேளையில் மற்றைய கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மாவை சேனாதிராஜா முதலமைச்சர் வேட்பாளராக வரவேண்டும் என்பதை ஆதரித்து தங்களுடைய கருத்துக்களை மிகவும் ஆணித்தரமாகக் கூறினார்கள் இந்தப் பிரச்சினை இழுபறி நிலையை அடைந்ததால் ஒரு முடிவில்லாமல் கூட்டம் இன்றைய தினம் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா, சுமந்திரன், செல்வராஜா, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில்

19 ஆம் பக்கம் பார்க்க

## 3 மாகாண சபைத் தேர்தல் வேட்புமனுக்கள் கோரல்

(கொழும்பு)

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

யூலை 25 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் முதலாம் திகதி வரையில் இந்த மூன்று மாகாண சபைகளுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

மாவட்ட செயலகங்களில் அமைக்கப்படும் மத்திய நிலையங்கள் மூலம் வேட்பு மனுக்கள் பொறுப்பேற்கப்படும்

சுயேட்சை வேட்பாளர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## பஸ்கட்டண உயர்வுகோரிய பணிநிறுத்தம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

எட்டு வீதம் பேருந்துக் கட்டண உயர்வு கோரி நேற்றைய தினம் இலங்கை தனியார் பேருந்து சங்கம் பணி நிறுத்தப் போராட்டத்தினை மேற்கொள்வதாக அறிவித்தது.

பணி நிறுத்தப் போராட்டம் நடந்துகொண்டிருந்த நிலையில் திடீரென தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

தமது சங்கத்தைச் சேர்ந்த சில தலைவர்களுக்கு மரண எச்சரிக்கை விடுக்கப்பட்டமையினாலேயே இந்தப் போராட்டத்தை கைவிடுவதாகவும் அவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து வழமைபோல தனியார் பேருந்துகள் பணியில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

19 ஆம் பக்கம் பார்க்க

# 27 வருடங்களின் பின்னர் அக்கரையில் மீள்குடியேற்றம்



வலிகாமம் கிழக்கு இடைக்காடு பிரதேசத்தின் அக்கரை கிராமம் 27 ஆண்டுகளின் பின்னர் மீள்குடியேற்றத்துக்காக மக்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வு நேற்றைய தினம் அக்கரை கிராமத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

அரச காணியான குறித்த பகுதி 1978 ஆம் ஆண்டு நில அளவை செய்யப்பட்டு மக்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த நிலையில் 1983 ஆம் அண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் 38 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டு மக்கள் அங்கு வாழ்ந்து வந்தனர்.

பின்னர் 1986 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கி வாழ்ந்துவரும் நிலையில் தற்போது மீள்குடியேற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அப்பகுதியில்

19 ஆம் பக்கம் பார்க்க


# 13 ஐ அமுல்படுத்தும் விடயத்தில் உறுதியாக உள்ளது இந்தியா

## துணைத்தூதுவர் மகாலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

13 ஆவது அரசியல் யாப்பு திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளதாக இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் இனவிவகாரங்களுக்கான செயலாளர் கலாநிதி சிதம்பரம் மோகனின் "13 ஆவது அரசியல் யாப்பு சம்பந்தமான யதார்த்தமும் சில உண்மைகளும்" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வின்போதே துணைத்தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இரு முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியா சென்றமையும், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கை வந்தமையும் ஆகும். இதைத் தொடர்ந்து இந்தியா என்ன சொன்னது, என்ன சொல்லவில்லை. அதேபோல்

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் கருத்தைப் பெற முடிவுசெய்துள்ள தெரிவுக்குழு

(கொழும்பு)

மாகாணங்களுக்கான அதிகாரங்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, இது தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதென முடிவு செய்துள்ளது.

ஒரு தேசமாக வாழ்வதற்காக இலங்கை மக்களை வலுப்படுத்துவதற்கான அரசியல் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்யவும், அறிக்கையிடவும் அமைக்கப்பட்ட சிறப்பு நாடாளுமன்றத் தெரிவிக்குழு, அது குறித்து பொதுமக்கள் கருத்துக்களை பெறுவது என்று முடிவு செய்துள்ளது.

இது குறித்து பொதுமக்கள் பிரதிநிதிகளை நேற்று முதல்

19 ஆம் பக்கம் பார்க்க

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு

## சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு நல்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.


இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலய பணிப்பாளருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகைதந்துள்ள பணிப்பாளர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.



இதன்போதே அவர் இலங்கைக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குவதாக தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 13 ஆவது அரசியல் யாப்பு: யாழில் நூல் வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

13 ஆவது அரசியல் யாப்பு சம்பந்தமான யதார்த்தமும், சில உண்மைகளும் என்ற நூல் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் இனவிவகாரங்களுக்கான செயலாளரும், அமைச்சர் வாசுதேச நாணயக்காரவின் ஒருங்கிணைப்புச் செயலாளருமான கலாநிதி சிதம்பரம் மோகனால் வெளியிடப்பட்டது.

நேற்றுக் காலை லக்ஸ் ஹோட்டலில் இந்நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் கலந்து கொண்டு முதற்பிரதியினைப் பெற்றுக் கொண்டார். 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான இந்நூல் மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக நூல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் சில யதார்த்தமான உண்மைகளை வெளிக் கொண்டுவர முடியும் என்று நூலாசிரியர் தெரிவித்தார்.

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அதிக அங்கத்தவர்கள் இணைவு

(கிளிநொச்சி)

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் இவ்வருடம் முதல் ஆறு மாத காலத்தில் 120 அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளனர். நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தற்போதுதான் மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு அங்கத்தவர்கள் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வருட இறுதியில் 420 பேராக இருந்த அங்கத்தவர் தொகை தற்போது 540 பேராக உயர்வடைந்துள்ளது. யாழ் மாவட்டத்தில் இந்த பிரதேச செயலகப் பிரிவு, சென்ற 2012 ஆம ஆண்டில் செயற்திறன் அடிப்படையில் முதலாமிடத்தைப்பெற்றது.

இவ்வருடத்தில் இதுவரை 40 விசேட மரணப் பணிக்கொடை கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 85 பேர் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்துள்ளனர்.

சென்ற வருடம் 30 பேர் விசேட மரணப்பணிக்கொடைக் கணக்குகளையும், . 19 பேர் சேமிப்புக் கணக்குகளையும் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் இந்த நம்பிக்கை நிதியத்தின் தலைமைப் பீட உறுப்பினர்கள் வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலக அலுவலகத்தில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை அங்கத்தவர் நலன்களைக் கவனிப்பதற்காக கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (90)

# விளையாட்டு நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடாத்தும் விளையாட்டு நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் இன்று மாலை 4.15 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேசசெயலர் தெய்வேந்திரம் சுகுணரதி, சிறப்பு விருந்தினர்களாக ஹரிஹணன் பதிப்பக முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ராஜ்குமார், யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா, யாழ்.மாநகரசபை உறுப்பினரும், யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மற்றும் மெய்வல்லுநர் சங்கத் தலைவர் எஸ்.றமணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு விளையாட்டு ஆர்வலர்களையும், நலன்விரும்பிகளையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (65)

# திருவிழாக்கள்

(தெல்லிப்பழை)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவப் பெருவிழா நாளை ஆரம்பமாகிறது. 25 நாட்கள் திருவிழா நடைபெற்று அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆடி அமாவாசை தீர்த்தத்துடன் நிறைவுபெறும்.

17 ஆம் திகதி புதன்கிழமை சண்முகர் திருநடனமும், 31 ஆம் திகதி புதன் கிழமை திருக்கார்த்திகையும், அடுத்த மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

✶ ✶ ✶

(மண்டைதீவு)

மண்டைதீவு மகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தான திருவிழா நாளை ஆரம்பமாகிறது.

நாளை ஆரம்பமாகும் திருவிழா இந்த மாதம் 23 ஆம் திகதி திங்கட் கிழமை பூரணையுடன் கூடிய முழுநிலாக் காலத்தில் தீர்த்தத்துடன் நிறைவடையுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (23)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2442 திகதி 10-07-2013

ஆங்கில எழுத்து: F

வெற்றி எண்கள் 13 14 23 26

போனஸ் இல: 48

ஜக்பொட் பரிசு ரூ.14,646,825/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 244814 | 20/- | 4,896,280/- |
| 2 இல | 17502 | 100/- | 1,750,200/- |
| 3 இல | 351 | 1,000/- | 351,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9786 | 40/- | 391,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 689 | 1,000/- | 689,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,646,825/- | - |
| 1 இல + போனஸ் இல | 11666 | 100/- | 1,166,600/- |
| 2 இல + போனஸ் இல | 531 | 500/- | 265,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 434 | 200/- | 86,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 285814 | | 11,375,320/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஜூலை 13 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 15,314,775/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/2935)



## INVITATION FOR BIDS

## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of NTS Lecture Hall | 500.00 | 55,000.00 | 90 | 2.8 | C8 |
| Construction of New Toilet in OPD Dispensary | 500.00 | 7,000.00 | 90 | 0.35 | C10 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

3. Interested bidders inspected bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receiptfor the cash payment for the bid fee from 2013.07.15 until 2013.07.23. The payment shall be made to the Shroff s Office, Teaching Hospital, Jaffna.

5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 2013.07.24, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office, Teaching Hospital. Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
12/07/2013.

(C/2936)

## அச்சுவேலியில் வெங்காயச் செய்கை குறைந்தளவில் முன்னெடுப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியின் பல இடங்களில் இந்த முறை சிறுபோக வெங்காயச் செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகளின் ஆர்வம் குறைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவான நிலப்பரப்புக்களில் வெங்காயச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் மிகக்குறைந்தளவான நிலப்பரப்புக்களிலேயே வெங்காயப் பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்றனர். இன்னும் சிலர் வெங்காயப்பயிர்ச் செய்கை மேற்கொள்வதை முற்று முழுதாகக் கைவிட்ட நிலையிலுள்ளனர்.

கடந்த வருடத்தில் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிரானது காலநிலை மாற்றத்தால் முற்றாக அழிந்தமையால் விதை வெங்காயம் இல்லாமையாலும் அதிகளவானோர் வெங்காயச் செய்கையினை மேற்கொள்ளாதுள்ளனர்.

அத்துடன் எரிபொருள் விலையேற்றத்தின் மத்தியில் அதிகளவான பணத்தை செலவழித்து செய்கை மேற்கொண்ட தமக்கு எவ்வித பயனும் கிட்டவில்லை எனவும் இவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

மேலும் இவர்கள் வெங்காயப் பயிரினை நம்பி வங்கிகளில் கடனையும் பெற்றுள்ளனர். இதனால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது திண்டாடுகின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய சம்மேளனங்களோ விவசாய அமைப்புக்களோ உதவினால் தாம் நனமையடைய முடியும் எனவும் விவசாயிகள கருதுகின்றனர். (85)

## மனிதனுடைய வாழ்வியல் விடயங்களை திருமுறைகள் சிறப்பாக எடுத்தியம்புகின்றன

### மலேசியா முன்னாள் அமைச்சர் டான் ஸ்ரீகுமரன்

(வலிகாமம்)

தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்யவேண்டும் என்றான் பாரதி. பாரதியின் இந்தக் கூற்றுக்கேற்ப ஈழத்தவரே தமிழை வளர்த்துக் கொண்டிருக்கின்றனர். மலேசியாவில் தமிழர் இப்பொழுது 7.5 விழுககாடாகவுள்ளனர். தமிழர்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றனர். இதனைத் தடுக்க உலகளாவிய ரீதியில் நாம் இணைந்து செயற்பட வேண்டும். என மலேசியாவின் முன்னாள் அமைச்சர் டான் ஸ்ரீ குமரன் தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற "மூவர் தமிழும் சைவ நெறியும்'' என்னும் ஆய்வரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும தெரிவித்ததாவது,

மலேசியாவிலும் இது போன்ற ஆய்வரங்குகள் நடைபெற்று வருகின்றன. தேவாரம் என்றால் தமிழ். தமிழ் என்ற சொல் பல விடயங்களைக் குறிக்கும். இது தமிழ்ச் சமூகத்தைக் குறிக்கும். தமிழர் பண்பாட்டைக் குறிக்கும். கலைகளைக் குறிக்கும் தமிழாகிய திருமுறையில் ஒரு மனிதன வாழ்வதற்கு வேண்டிய அனைத்து விடயங்களிலும கூறப்பட்டுள்ளன.

எனவே தான் திருமுறையை வாழ்வியல் என்கிறோம். அரசியல் பற்றியும் மூவர் தமிழ் கூறுகிறது.

இதனை நாவுக்கரசரின் நாமார்க்கும் குடியல்லோம் என்ற வாசகம் விளக்கும். பருவத்தே பயிர்செய் என மூவர் தமிழ் கூறுகிறது. திருமூலர் வாக்குறுதிக்கேற்ப மூவர் தமிழை அருளியோர் வாழ்ந்துகாட்டியுள்ளனர்.

எமது நாட்டில் கிறிஸ்தவம், இஸ்லாம் மிக விரைவாக வளர்ந்து வருகிறது. எனவே தான் மூவர் தமிழாகிய திருமுறை பற்றிப் பேச வேணடியுள்ளது. நம்மொழி இறைவனுடன் பேசும் மொழி எத்தனை மொழிகளிருந்தாலும் தாய் மொழிக்கு அவை ஈடாகாது. எனத் தெரிவித்தார்.

(06)

## கும்பாபிஷேகம்

(முழங்காவில்)

பூநகரி செல்லையா வீதியிலுள்ள ஸ்ரீ கண்ணகியம்பாள் மகா கும்பாபிஷேக நிகழ்வு எதிரவரும் 14 ஆம் திகதி காலை 7 மணியளவில் நடைபெறவுள்து.

இதில் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை• ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அடியாரகளின் எண்ணெய்க காப்பு சாத்தும் வைபவம் இடம் பெறும்.

தொடர்ந்து கும்பாபிஷேக கிரியைகள் வவுனியாவைச் சேர்ந்த ஸ்ரீ சிதம்பரலட்சுமி திவாகர குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது. (112)

## பொலிஸ் பயிற்சியாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை

### கோயில், பொது இடங்கள் தரிசிப்பு

(மானிப்பாய்)

அநுராதபுரம் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் பயிற்சியாளர்கள் யாழ்ப்பாணத் துக்கு வருகை தந்து யாழ்ப்பாண கலாசார சமய விழுமியங்கள் பற்றி அறிந்து கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பிளேற றின் ஏற்பாட்டில் இரவு வந்த இவர்கள் மறுநாள் ஞாயிற் றுக்கிழமை ஆனைக்கோட்டை மூத்த நைனார் ஆலய தேர் திருவிழாவில் கலந்து கொண்டு அங்கு நடைபெற்ற ஆகம வழிபாடுகள் பற்றியும் அவற்றுக்குரிய விளக்கங்கள் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கந்தரோடையில் உள்ள விகாரை, ஜம்புகோளப்பட்டினம், காரைநகர் கசூரினா கடற்கரை போன்ற பல இடங்களுக்கும் சென்று கலை கலாசார பண்பாட்டு நடைமுறைகள் பற்றி தெரிந்து கொண்டனர்.

இதன் பின்னர் இவர்கள் இங்கிருந்து முல்லைத்தீவுப் பிரதேசத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப பட்டுள்ளது. (54)



அகில இலங்கை இந்து மன்றத்தினால் முல்லை மாவட்டத்தில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் குடும்பங்களுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு முள்ளியவளை ஸ்ரீ கல்யாண வேலவர் தேவஸ்தானத்தில் நடைபெற்றபோது பிரதிநிதி ஒருவரால் பெண்ணொருவருக்கு உதவிகள் வழங்கப்படுவதைக் காணலாம். (40)

## வீதி புனரமைப்பு எப்போது?

(வரணி)

வரணி தம்பான் கும்பிட்டான் புலத்து ஆலய வீதிக்கு கிழக்கு பக்கமாக உள்ள ஏழு கன்னிகள் நாச்சிமார் கோவில் வீதி மக்கள் பாவிக்க முடியாதவாறு மிகமோசமாக சேதமடைந்துள்ளது.

இந்த வீதியில் அரச அலுவலகங்கள் அமைந்துள்ளதுடன் ஜே/340 கிராம அலுவலர் பிரிவு மக்கள் பயன்படுத்தும் முக்கிய வீதியாக இந்த வீதி காணப்படுகிறது.

இந்த நிலையில் இவ்வீதியை புனரமைப்பு செய்து தம்முடைய அவல நிலையை உரியவர்கள் தீர்ப்பார்களா? என அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (150)

## தித்திக்கும் திருவாசகம் தந்த திருவாதவூரடிகள்



உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்பரம் பொருளாகிய சிவபெருமானைக் குறித்துப் பெற்ற தித்திக்கும் திருவாசகம் ஒரு தீந்தமிழ்பனுவலாகும். இந்தத் தேன் போன்ற திருவாசகத்தைத் தந்த திருவாதவூரடிகள் எனப்படும் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசைத் தினம் இன்றாகும்.

உடம்புக்கு வரும் நோய்க்கு மருந்து தேன். அதே போலப் பிறவிப்பிணிக்கு மருந்து திருவாசகம் என்னுந்தேன். இந்த இனிய திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார். சிவபெருமானே நேரில் வந்து எழுதப் பெற்ற பெருமையை உடையது திருவாசகம்.

இந்தியாவில் பாண்டி நாட்டிலே திருவாதவூரிலே வாழ்ந்த சம்புபாதசிரியர்-சிவ ஞானவதியார் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த மாணிக்க வாசகர் இளவயதிலேயே நல்ல அறிவாளியாகத் திகழ்ந்தமையால் பாண்டியனுக்கு மந்திரியாகக் கடமையாற்றும் பாக்கியம் கிடைக்கப்பெற்றது.

குதிரை வாங்கப் புறப்பட்ட இவர் சிவன் திருவருளாய் குருந்த மரநிழலிலே தருத் தாட்கொள்ளப் பெற்றார். நரிகளைப் பரிகளாக்கித் திருவிளையாடல் செய்த சிவன் வகையைப் பெருக்கெடுக்கச் செய்து செம்மனச் செல்விக்கும் திருவருள் புரிந்து பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டு பல் வேறு அற்புதங்காட்டி மாணிக்கவாசகரைத் தம்மோடு இணைதது் கொண்டார்.

> **இன்று மாணிக்க வாசக சுவாமிகளின் குரு பூசை தினமாகும். அதையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது.**

ஆனிமக நாளில் முத்தி பெற்ற மாணிக்கவாசகர் சைவ சமயிகளுக்கு அளித்த அருஞ் செல்வம் திருவாசகம். மார்கழி முழு நாளும் மற்றெல்லாத் திருமுறைகளையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு திருவாசகம் மட்டுமே ஓதுவதிலிருந்து இதன் பெருமை வெளிப்படுகிறது.

திருவாசகத்தின் அருமையையும் பெருமையையும் உணர்ந்த நம் முன்னோர் ஆலயங்களில் திருவாசகமுற்றோதல் செய்து வந்துள்ளனர். இப்போதும் இ்.து நடைமுறையிலுள்ளது.

தொல்லையிலும் பிறவிச் சூழும் தலைநீக்கி அல்லலறுத்து ஆனந்தத்தை அள்ளித்தரும் திருவாசகத்தை சைவ மக்கள் ஒவ்வொருவரும் ஓதி உய்த்துணர்தல் வேண்டும்.

* * * *

**கலாபூசணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

## பதிவு செய்யவும்



(வரணி)

தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை செயலகத்தில் வாகனப் புகைப் பரிசோதனை நடவடிக்கைகளை சங்க வளாகத்தில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வரி அனுமதிப்பத்திரம் முடிவுறுவதற்கு முன்பு அருகில் உள்ள கூட்டுறவுச் சங்க கிளைகளில் வாகன உரிமையாளர்கள் தமது பெயர், முகவரி, வாகன வகை, வாகன இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல். டெஸ்கார்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வேறென்ன வழி நமக்கு?

உலகம் முழுவதிலும் உள்ள தகுதியும் திறமையும் வாய்ந்த தேர்ச்சி பெற்ற 700 ஆயிரம் விஞ்ஞானிகளுக்குள், 520 ஆயிரம் பேர் நமது வாழ்க்கையை சீர்குலைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்களாம். அவர்களுள் வெறும் 180 ஆயிரம் பேர் மட்டுமே மானுட மேன்மையைப் பற்றிய ஆக்க பூர்வமான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது.

விஞ்ஞானிகள் மட்டும் என்றில்லை, சாதாரண பொதுமக்களிலும் தெரிந்தோ தெரியாமலோ நிலைமைகளை சீர்குலைக்க உதவிக் கொண்டிருப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. இல்லையெனில் நம் கஷ்டங்கள் ஏன் முடிவே இல்லாமல் தொடர வேண்டும்? நமக்கு வேண்டியதைத் தீர்மானித்து அதனைச் சாத்தியப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எண்ணாமல், சாத்தியமில்லாத விருப்பக் கனவுகளிலேயே விடாப்பிடியாக நின்று வாழ்வைச் சீர்குலைக்க நாண்டு கொண்டிருப்பதை வேறு எப்படி விளங்கிக் கொள்வது?

நமது லட்சியங்கள், உள்ளாசைகளுக்காக பெரும்பாலோரைப் பலியிட்டுக் கொள்வதாக நம் பிடிவாதங்கள் தொடரக் கூடாது. நாம் மிகச் சரியானது இதுவே என்று கருதிச் செய்யும் சில செயல்கள் மற்றவர்கள் பலபேரைத் தண்டிப்பதாக அமைந்து விடும் சாத்தியங்களை நாம் உணர வேண்டும்.

போத்துக்கல் எழுத்தாளர் யொஸே ஸரமாகோ நாவலில், லாசரஸ் மரணமடைந்து கிடக்கும்போது இயேசு அவனை உயிர்ப்பிக்க முயல்கிறார். அப்போது மரியா மக்தலேனா தடுத்து நிறுத்தி, போதும் அவனை உயிர்ப்பித்து இரண்டுமுறை சாகச் செய்யாதீர்கள் என்கிறாள். மக்களுக்கு உணர்ச்சியூட்டி, பகையை உயிர்ப்பித்து, இன்னுமொரு தடவை போரிட்டு அழிவதே நமக்கிருக்கும் ஒரே மார்க்கம் என்று காட்ட முனைபவர்கள் இதை யோசிக்க வேண்டும்.

அவநம்பிக்கைகளையே வெளியிட்டபடி எதிர்ப்புகளில் நாம் சிதைந்து கொண்டிராமல் அதிலிருந்து வெளிவர வேண்டும். தொடர்ந்து ஏமாற்றமடைந்து கொண்டிருந்தாலும் கூட, இழப்புகளற்ற, அவதிகளும் சாவுகளும் அற்ற இயல்பான ஒரு வாழ்வுக்காக நம்பிக்கையோடு மறுபடி மறுபடி அணுகுவதில் பெரிய பாதகங்கள் இருக்காது.

அவநம்பிக்கையோடு விலகிச் செல்லச் செல்ல அழிவுகளின் புதைசேற்றுக்குள்ளேயே நாம் மூழ்கிக் கொண்டிருக்கும் நிதர்சனத்தை விட அது மேலானது. சமூகத்தை மோசமான விபத்துகளுக்குத் தள்ளிவிடாமலிருக்கும் பொறுப்புணர்வையும் அது காண்பிக்கும். நலம் பயக்கும் வழியை நாம் தேர்ந்து கொள்ள வேண்டும்.

“ஒன்றே என்னின் ஒன்றே ஆம்
பல என்று உரைக்கின் பலவே ஆம்
அன்றே என்னின் அன்றே ஆம்
ஆமே என்னின் ஆமே ஆம்
இன்றே என்னின் இன்றே ஆம்
உளது என்று உரைக்கின் உளதே ஆம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா!”

அந்த கம்பனின் பாடல் சொல்வதும் இதைத்தான். ஒன்று என்றால் ஒன்றுதான். பல என்றால் பல. அல்ல என்றால் அல்ல. ஆம் என்றால் ஆம். இல்லை என்றால் இல்லை. உண்டு என்றால் உண்டு. இவற்றில் எது நலம் பயக்குமோ அதை நம்பி நம் வாழ்க்கை செல்கிறது. இதைவிட வேறென்ன வழி நமக்கு?

- ஆசிரியர்

# வடமாகாணசபை தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவுள்ளது. இந்தியாவுக்கான விஜயம் மேற்கொள்வது தொடர்பில் இன்னும் தீர்மானம் மேற்கொள்ளவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வந்திருந்த சிவ்சங்கர் மேனன், இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி, திகதி அறிவித்ததன் பின்னரே, இந்திய விஜயம் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் இதற்கிடையில் எதிர்வரும் திங்கட்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடம் கூடவுள்ளது. இதன் போது எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படாத போதும், தனித்து போட்டியிடுவது தொடர்பில் ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்த விரைவில் முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடம் கூடி இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# மாகாணசபை தேர்தல் பணிகளில் பங்கேற்கப் போவதில்லை

## ஆசிரிய தொழிற்சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் பணிகளில் பங்கேற்கப் போவதில்லை என இலங்கையின் பெரிய ஆசிரிய தொழிற்சங்கமான இலங்கை ஆசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது. ஆசிரியை ஒருவரை மண்டியிடச் செய்த வடமேல் மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினருக்கு இம்முறையும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது.

தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள குறித்த அரசியல்வாதிக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கினால், தேர்தல் கடமைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்ளப்போவ தாக இலங்கை ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள் ளது.

வடமேல் மாகாணசபையின் உறுப்பினர் ஆனந்த சரத் குமார என்பவருக்கு வாய்ப்பு அளிக்கப்படக் கூடாது எனக் கோரியே இவ்வாறு போராட்டம் நடத்தப்படவுள்ளது. அழுத்தம் காரணமாக சரத் குமார கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போது வடமேல் மாகாணசபைத் தேர்தலில் சரத் குமார போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாக்.உயர்ஸ்தானிகர் கொலை முயற்சி; வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

இலங்கைக்கான பாகிஸ்தானின் முன்னாள் உயர்ஸ்தானிகர் பசீர் அலி மொஹமட் கொலை முயற்சி வழக்கு செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது முதலாம், இரண்டாம் பிரதிவாதிகளின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகியிருந்தார். மூன்றாவது பிரதிவாதியின் சார்பில் சட்டத்தரணி மொகமட் அஜமுல்லா ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கானது, முறையே யோகராஜா நிரோஜன், சுப்பிரமணியம் சுபேந்திரராஜா, கனகரெத்தினம் ஆதித்தயன் ஆகிய மூவருக்கும் எதிராகவுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2006 ஆம் அண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் வாகனப்பேரணியாக சென்று கொண்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் உயர்ஸ்தானிகர் பசீர்அலிமொஹமட் என்பவரை கொலை செய்ய முயற்சித்தார்கள் என்றே இந்த மூவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இரண்டாம் மூன்றாம் பிரிவுகளின் கீழ் 25 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அறியாத மற்றவர்களுடன உடந்தையாக இருந்து மரணத்தை விளைவிப்பதற்கு சதித்திட்டம் தீட்டியமை, வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியதனால் உயர்ஸ்தானிகரின் பாதுகாவலர்களான நான்கு லான்ஸ் கோப்ரல்களையும் வாகன சாரதி சிசிர ஜயந்த உட்பட 7 நபர்களிற்கு மரணத்தை விளைவித்தமை, பயணிகள் எண்மருக்கு கடும் காயத்தை விளைவித்தது. அத்துடன், 12 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட ஆதனங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை ஆகியன இந்தக் குற்றச்சாட்டுகளில் அடங்குகின்றன. அரச தரப்புச்சாட்சிகளாக சம்பவத்தை நேரில் கண்ட விசாரணை அதிகாரிகள், சட்டமருத்துவ அதிகாரிகள் என 28 சாட்சிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வழக்கு, மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க முன்னிலையில், மேலதிக விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் அரசதரப்பு சாட்சியங்களாக 28 சாட்சிகளின் பெயர்கள் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கின் முதலாவது பிரதிவாதியாக குற்றச்சாட்டுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் யோகராசா நிரோஜனுக்கு எதிராக அரச தரப்பு சார்பாக சாட்சியமளிக்கவிருந்த ஒரேயொரு சாட்சியான முத்தையா பிள்ளை விக்கினேஸ்வரன் நேற்றையதினம் மன்றில் பிரசன்னமாய் இருக்குமாறு நீதிமன்றம் கடந்த தவணையின் போது உத்தரவிட்டு அழைப்பாணையும் விடுத்திருந்தது. பொலிஸாரின் அறிவுறுத்தலின் பிரகாரம் அரச தரப்பு சாட்சியான முத்தையா பிள்ளை விக்கினேஸ்வரன் காலமாகி விட்டதாக அரச சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்திற்கு நேற்று கொண்டுவந்தார்.

இதனையடுத்து சட்டமருத்துவ அதிகாரி சாட்சியமளித்தார். அவரது சாட்சியத்தை அரச சட்டத்தரணி தமித்னி டி சில்வா நெறிப்படுத்தினார்.

இந்தச் சம்பவத்தில் பலியான, லான்ஸ் கோப்ரல்களான சமிந்த குமார, பிரேம் ஜயந்த, இந்திக அருணசிசிர ஜயந்தன ஆகியோரது மரண பரிசோதனைகளை தான் மேற்கொண்டேன். குண்டுத் தாக்குதலில் மரணமடைந்தவர்களில் உடலின் பல பாகங்களிலும் 12 காயங்களிலிருந்து 57 காயங்கள் வரை காணப்பட்டன. சமிந்த குமார மற்றும் பிரேம் ஜயந்த ஆகிய இருவரது உடலில் பல காயங்கள் காணப்பட்டதுடன் அவர்களது மூளைகளும் சிதறடிக்கப்பட்டிருந்தன.

குண்டுத்தாக்குதலில் காயம் அடைந்தவர்களை விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு வந்திருந்தால் கோப்ரல் இந்திக அருணசிசிர ஜயந்தனவின் மரணம் தவிர்க்கப்பட்டிருக்கும். இந்த மரணங்கள் குண்டுத்தாக்குதலினால் ஏற்பட்ட மரணங்களாகும் என்றார்.பாகிஸ்தானின் முன்னாள் உயர்ஸ்தானிகராகிய பசீர் அலி மொஹமட்டின் பாதுகாப்பு பிரதானியான மேஜர் கோதாகொட சாட்சியமளிக்கையில், உயர்ஸ்தானிகருக்கு தேவையான பாதுகாப்புகளை தாங்கள் வழங்கினோம். உயர் ஸ்தானிகர் அவசரமாக வெளியில் செல்லும் நேரங்களில் தங்களுக்கு உயர்ஸ்தானிகரது காரியாலயத்திலிருந்து அறிவித்தல் எந்நேரமும் கொடுக்கப்படுவதில்லை. அதனால், சம்பவம் நடைபெற்ற தினம் மேலதிக பாதுகாப்ப வழங்கப்படவில்லையெனவும் உயர்ஸ்தானிகரது பாதுகாப்பிற்கு நியமிக்கப்பட்டிருந்த மரணமடைந்த நான்கு லான்ஸ் கோப்பிரல்களே அன்றையதினம் பாதுகாப்பு வழங்கினர் என்றார்.

இதனையடுத்து, அரச தரப்பு சட்டத்தரணி சாட்சியங்களை நெறிப் படுத்துவதை நிறைவுசெய்து கொண்டார். முதலாம் பிரதிவாதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் வேண்டுகோளிற்கு சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை அரச சட்டத்தரணி அடுத்த தவணையின் போது நீதிமன்றிற்கு அறிவிக்கமாறு உத்தரவிட்டு நீதிபதி வழக்கை செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைக்காக ஒத்திவைத்தார்.

# சம்பிக்கவும் சம்பந்தரும்




**எஸ்.எம்.எம்.பஷீர் கட்டுரையிலிருந்து**

**‘வரங்கொடுக்கும் தேவதைகள்**
**வந்தபோது தூங்கினேன்**
**வந்தபோது தூங்கிவிட்டு**
**வாழ்க்கையெல்லாம் ஏங்கினேன்**
**கரங்கொடுக்கும் வாய்ப்புக்களை**
**கை கழுவி வீசினேன்**
**கை கழுவி வீசிவிட்டு**
**காலமெல்லாம் பேசினேன்’**
**- மு.மேத்தா (கண்ணீரப் பூக்கள்)**

இலங்கை குறித்த தென்னிந்திய அரசியல் ஆய்வாளரான என். சத்தியமூர்த்தி, நாடாளுமன்ற தெரிவுக் குழுவினை பகிஸ்கரிப்பது குறித்து கூறுகையில் “பிரபாகரனுக்கு பிந்திய சகாப்தத்திலும் சிங்கள தேசியவாத விமர்சனங்களுக்குள்ளாகும் அமிர்தலிங்கத்தின் அரசியல் விளையாட்டிலிருந்து தமிழர் தேசிய கூட்டமைப்பால் விடுபட முடியவில்லை” என்று அவர் சொல்வது மிகச் சரியாகவே எனக்கும் தோன்றுகிறது.

13ஆவது திருத்தச் சட்டம் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் என்ன நிலைப்பாட்டினை எடுத்திருந்தார் என்பது பற்றி நான் முன்னர் எழுதிய கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்,

“திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை இலங்கை அரசு ஏற்படுத்தியதாக அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி மகஜர் ஒன்றினை கையளித்தது. அப்போதே அந்த மகஜரில் மாகாண சபை அவ்வாறான குடியேற்றங்களை தடுப்பதற்கான அதிகாரத்தை கொண்டிருக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தனர். எனவே காணி அதி-காரம் தேவை என்பதை, அதனூடாக அரச குடியேற்றத்தை தடுக்க இந்திய அரசின் உதவியை கூட்டணியினர் அன்று நாடியிருந்தனர். அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான அமிர்தலிங்கமும் பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்றுக் கொண்டவரல்ல. ஆகஸ்ட் மாதம் 1987 ராஜீவ் காந்தி சென்னை மெரீனா பீச்சில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போது இந்தியாவிலுள்ள மாநில அரசுகள் பெற்றுள்ள சுயாட்சி அதிகாரத்துக்கு குறையாத அளவு அதிகாரங்களை இலங்கைத் தமிழர்கள் பெறுவதை உறுதி செய்வதாக கூறியிருந்தார். ஆனால் இந்திய அரசின் அனுசரணையுடன் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் அதற்கு நிகரானதா என அமிர்தலிங்கம் சென்னையில் 1988ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் கேள்வி எழுப்பியிருந்தார்.”

சிங்களத் தேசிய வாத சக்திகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உடுக்கை அடித்து பேயாட்டம் ஆடுவதனால், உருவேறி ஆடுகிறார்கள். அதற்கான காரணம் தமிழ்த் தேசிய அமைப்பின் அமிர்தலிங்க விளையாட்டுத்தான்.

“72 மணித்தியாலத்துக்குள் புலிகளை ஆயுத பரிகரணம் செய்வோம் என்று இந்தியா வாக்குறுதியளித்தே இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டது, அவ் வாக்குறுதியை இந்தியா நிறைவேற்றத் தவறி விட்டது. எனவே இந்திய இலங்கை ஒப்பந்தம் சட்டரீதியானது அல்ல” என்று கூறுகிற ஹெல உறுமய பாட்டாளி சம்பிக்கவின் கருத்தை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு,

அவர் கூறும் இன்னுமொரு விடயம் குறித்து கவனத்தைக் குவித்தால், கூட்டமைப்பினரால் கிளர்ந்தெழும் (சிங்கள) தேசிய வாதத்தைக் காண முடியும். “இந்தியா, ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளோம், அல்லது பாகிஸ்தான் அமைத்தது போல் நேரடி நடவடிக்கை மூலம் ஈழம் அமைப்போம்” என்று சம்பந்தன் மட்டக்களப்பில் பேசியதாக பாட்டாளி சம்பிக்க குறிப்பிடுகிறார்.

அப்படி அவர் பிறநாட்டு உதவியுடன் அல்லது உதவியின்றியோ நாட்டைப் பிரிக்கப் பேசியிருந்தால் இலங்கையின் அரசியல் யாப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தினை, நாடாளுமன்றத்தில், தான் எம்.பீ யாக பதவியேற்ற பொழுது எடுத்த சத்தியப் பிரமாணத்தை மீறி உள்ளார். ஏனெனில், “.....ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றி காப்பேன் என்றும் இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவு அளிக்கவோ, நிதி உதவவோ, ஊக்குவிக்கவோ பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பயபக்தியுடன் உறுதி செய்கிறேன் சத்தியம் செய்கிறேன்.” இது இவர்கள் எம்.பீ பதவிகளுக்காக எடுத்துக்கொண்டுள்ள சத்தியப்பிரமாணம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான திருத்தங்கள் பற்றிய கருத்துக்கள் விவாதிக்கப்பட உள்ளன. தங்கள் தரப்பு நியாயங்களை இந்தியாவிற்கு ஓடிச் சென்று ஒப்பாரி வைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொண்டு ஏன் தங்கள் கருத்துக்களை நிபந்தனையின்றி முன்வைக்கக் கூடாது. இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. இந்தியாவை அல்லது ஏனைய சர்வதேச நாடுகளை இலங்கை மேவி நடக்க வேண்டும் என்பதற்காக இலங்கை மீது யாரும் ஆதிக்கத் திணிப்பினை செய்ய முடியாது என்ற தேசியவாதக் கருத்து மேலெழும் நேரத்தில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடாக்கண்டன் கொடாக் கண்டனாய் வில்லங்கம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாங்கள் ஏன் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று வழக்கம் போல் தங்களின் “சட்ட தொனியிலான” நீண்ட அறிக்கையை, தமது பக்க நியாயத்தை வெளியிட்டுள்ளார்கள். அரசின் மீது நம்பிக்கை இல்லை, மங்கள முனசிங்கவின் அறிக்கையில் இருந்து தொடங்க வேண்டும் என்ற தம்து கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்கவில்லை, அரசின் நாடாளுமன்றத் தெரிவுக் குழு வெறும் அரசநாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஒரு உப குழுவே ஏனெனில் அதில் எதிர்க் கட்சி பிரதிநிதிகள் இல்லை. அரசின் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் திஸ்ஸ விதாரண இல்லை, ஹக்கீம் இல்லை என்றெல்லாம் பல கதைக்குதவாத சாட்டுக்களை முன் வைத்திருக்கிறார்கள்.



1957 பண்டா-செல்வா ஒப்பந்தம் வடக்கு மாகாணம் ஒரு பிராந்தியமாகவும் கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பிராந்தியங்களாக பிரிப்பதையும், இரண்டு பிராந்தியங்கள் (மாகாணங்கள்) மாகாண எல்லைகளைத் தாண்டி தங்களுக்குள் இணைந்து கொள்வது என்பதனை கொண்டிருந்ததால், அவ்வாறான ஒப்பந்த ஏற்பாடுகள் மூலம் வடக்கு கிழக்கு இணைந்து தமிழ் தாயக ஆட்சி உருவாகிறது என்று கூறி, அவ்வொப்பந்தத்திற்கு எதிராக ஜே.ஆர். ஜெயவர்த்தனா கண்டிக்கு பாத யாத்திரை புறப் பட்டார். அத்துடன் ஒப்பந்தமும் முடிவுக்கு வந்தது என்பது வரலாறு.

அதே ஜே.ஆர். ஜெயவர்த்தனா அங்கத்துவம் வகித்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியமைக்க ஒத்தாசை வழங்கிய தமிழரசுக் கட்சி 1965இல் டட்லி செல்வா ஒப்பந்தம் செய்து மாவட்ட சபைகளை அங்கீகரித்தனர். பின்னர் போயும் போயும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை புனித பிரதேசமாக பிரகடனம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையில் முரண்பட்டு அரசாங்கத்தை விட்டு தமிழரசுக் கட்சி வெளியேறியது என்று சொல்லப்படுகிறது. அதனால் இறுதியில் டட்லி செல்வா ஒப்பந்தமும் கிடப்பில் போடப்பட்டது.

சுமார் 30 வருடங்களின் பின்னர், வரலாறு எதிர்த்திசையில் பயணித்தது, எந்த ஜெயவர்த்தனா எந்த அடிப்படையில் பண்டா செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தாரோ அதே ஜெயவர்த்தனாவை கொண்டே இந்திய தலையீட்டுடன் வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிபந்தனையுடன் இணைக்கப்பட்டன. இம்முறை வடக்கு கிழக்கை தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசமாக ஆக்கிய இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைச் சாத்தியமற்றதாக்கியவர்கள் தமிழ் மக்களின் “ஏகபோக பிரதிநிதிகளான புலிகள்”.

இப்பொழுது ராஜீவைக் கொன்றாகிவிவிட்டது பிரபாகரனும் கொல்லப்பட்டுவிட்டார். புலிகள் பிரேமதாசாவுடன் சேர்ந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முட்டுக் கட்டை போட்டனர்.

இப்பொழுது 13ஆவதை த்க்க வைக்க வேண்டும், அதனை மேம்படுத்த வேண்டும், வடக்கு கிழக்கு இணைப்பை மீண்டும் மீட்டெடுக்க வேண்டும் அதற்கு இந்தியா உதவ வேண்டும் என்பதே இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ராஜீய நிலைப்பாடு. அதற்கான வேலைத் திட்டங்களையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்ய வேண்டும் என்பதே புலம் பெயர் புலி ஆதரவுத் தமிழர்களின் அறிவுறுத்தல். உட்கிடையாக ஈழம் காண 13ஐ இப்போதைக்கு எப்படி நீர்த்துப் போகாமல் காப்பாற்றுவது தொடர்பில் இந்தியாவின் உதவி மிக அவசியமாக தேவைப்படுகிறது. புலிகளின் ஏற்பாட்டில் உருவான தமிழ் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரன் இந்தியா தமிழ் மக்கள் சார்பில் இந்த ஒப்பந்தத்தை செய்தது என்று இந்தியாவிற்கு பொய்யுரைத்து குளிரூட்டுகிறார். ஆனால் பிரபாகரன் இவ்வொப்பந்தம் தமிழர்களை -புலிகளை- கலந்தாலோசிக்காத ஒப்பந்தம், ”ஈழத்” தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட ஒப்பந்தம் என்று கூறியவர். இந்தியா எனும் அயல் நாடு தனது வல்லாதிக்க வலிமையை எம்மீது திணித்தது என்று சொன்னவர். ஜே ஆரின் மீதும் இந்தியா தனது வல்லாதிக்க வலிமையை விமானத்தில் பருப்பு பொட்டலம் போட்டு காட்டியே பயமுறுத்தி வசைத்தது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் பிரபாகரனும் பிரேமதாசாவும் சொன்னதுபோல் இந்தியப் படையை வெளியேற்ற கூறிய “இது அண்ணன் தம்பிக்கிடையிலான பிரச்சினை இதில் இந்தியா தலையிடத் தேவையில்லை நாங்களே தீர்த்துக் கொள்வோம்” என்பது சரியான நிலைப்பாடு எனில்,

அதுபோலவே பாட்டாளி சம்பிக்க சொல்லும் சிங்கள தேசியவாதத்தை ஒருபுறம் வைத்து விட்டு இலங்கையர் என்ற கோதாவில் அனைத்து மக்களுக்கும் இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க எமது நாட்டுப் பிரச்சினையில் அந்நிய தலையீட்டை (இந்தியாவோ அமெரிக்காவோ, பிரித்தானியாவோ அல்லது ஏனைய பிற நாடுகளோ), நாட்டின் பிரிவினையை ஆதரிக்க அனுமதிக்க முடியாது என்பதால் “இது அண்ணன் தம்பிக்கிடையிலான பிரச்சினை இதில் இந்தியா தலையிடத் தேவையில்லை நாங்களே தீர்த்துக் கொள்வோம்” என்று செயற்படுவதே பொருத்தமாக விருக்கும்.

**புலிகளின் ஏற்பாட்டில் உருவான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரன் இந்தியா தமிழ் மக்கள் சார்பில் இந்த ஒப்பந்தத்தை செய்தது என்று இந்தியாவிற்கு பொய்யுரைத்து குளிரூட்டுகிறார். ஆனால் பிரபாகரன் இவ்வொப்பந்தம் தமிழர்களை -புலிகளை- கலந்தாலோசிக்காத ஒப்பந்தம், “ஈழத்” தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட ஒப்பந்தம் என்று கூறியவர். இந்தியா எனும் அயல் நாடு தனது வல்லாதிக்க வலிமையை எம்மீது திணித்தது என்று சொன்னவர்.**

# தற்போதுள்ள தீர்வுகளில் சிறந்தது



## 13 ஆவது அரசியலமைப்பு

(கொழும்பு)

13 ஆவது அரசியல் அமைப்பை மாற்றியமைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையினர் தயாராகி வருகின்ற போதும், தாம் 13 இல் மாற்றங்கள் கூடாது என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்தும் இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசியல் அமைப்பு இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக இலலாத போதும் தற்போதுள்ள தீர்வுகளில் அது சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆசியாவில் இலங்கையை ஆச்சரியம் மிக்க நாடாக கொண்டு வரவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விரும்புகிறார். அப்படியாயின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள் ளது.

எனினும் ஏற்கனவே அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழு இனப் பிரச்சினைக்கான தமது தீர்வை முன்வைத்துள் ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் போது அதிகாரப் பரவலாக்கம் அவசியமானது. அது காலத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டிலும் சிங்கள மொழியை அரச மொழியாக பிரகனப்படுத்திய போது இன்றைய நிலை தோன்றியிருந்தது.

எனினும் அந்த தவறை தமது தந்தையான எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க செய்தமைக்காக அவருடைய மகள் சந்திரிக்கா பதவிக்கு வந்த போது 2000 ஆம் ஆண்டில் அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய தீர்வுப் பொதியை முன்வைக்க வேண்டியிருந்தது என்றும் ராஜித சுட்டிக்காட்டியுள்ளார்.

# தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில்

## பொதுநலவாய மாநாடு ஏற்பாடு

(கொழும்பு)


நாட்டின் தனித்துவ அடையாளங்களை பிரதிபலிக்கும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள், மாநாடு ஏற்பாடு செய்யப்படும்.

தேசிய தன்மையும், நாட்டின் தனித்துவ அடையாளங்களையும் பிரதிபலிக்கும் வகையில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு ஏற்பாடுகள் குறித்த கூட்டம் அலரி மாளிகையில் நடைபெற்றுள்ளது.

மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து இந்த கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாநாட்டுக்கு சமாந்தரமாக பல்வேறு கண்காட்சிகள் போட்டிகள் என்பனவும் ஒழுங்கு செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உலக சமாதானத்திற்காக நேர்வே செயற்பட்டு வருகிறது



(கொழும்பு)

பொதுபலசேனவிற்கு நோர்வே ஒருபோதும் உதவவில்லை அதே போல எதிர்காலங்களில் உதவப்போவதுமில்லை. நாம் எப்போதும் உலக சமாதானத்திற்காகச் செயற்பட்டுவருகிறோம் என்று இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறீற் லோச்சென் தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த 30 வருடகால கொடிய யுத்தத்தை நாமறிந்தோம். அதன்போது எமது நாடு வகித்த வகிபாகத்தை உலகறியும். எனவே நாம் எப்போதும் சமாதானத்தின்பால் செயற்படுகின்றவர்களுக்கே உதவிசெய்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறீற் லோச்சென் சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைக்கான பேரவையின் அம்பாறை மாவட்ட குழுவினரைச் நேற்று புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பு, சாய்ந்தமருதிலுள்ள பேரவையின் தலைமையகதத்தில் தலைவர் டாக்டர் ஏம்ஜ.எம். ஜெமீல் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது. தூதுவருடன் அபிவிருத்திக் கான சிரேஸ்ட ஆலோசகர் வித்யா பெரேராவும் சமுகமளித்திருந்தார்.

இந்த சந்திப்பின் போது சமகால விடயங்கள் பற்றி விரிவாக ஒரு மணிநேரம் கலந்துரையாடப்பட்டது. இங்கு தூதுவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம், பாகிஸ்தான் போன்ற பல நாடுகளில் பல வருடங்கள் தூதுவராகப் பணியாற்றியுள்ளேன். எல்லா நாடுகளிலும் சமாதானத்திற்காகவே பாடுபட்டுள்ளோம். இலங்கையிலும் அப்படியே பாடுபட்டோம் என்றார். நிலைமை அப்படியிருக்க சில ஊடகங்கள் நாம் பொதுபலசேனாவிற்கு உதவுவதாகவும் சமாதான விரோதிகளுக்கு ஒத்துழைப்பதாகவும் பிழையாக எழுதிவருகின்றனர். அது தவறு. எமக்கு அது கவலையளிக்கிறது.

சமயத்தலைவர்கள் என்றும் எனது விருப்பத்திற்குரியவர்கள். அவர்களால் சமாதானத்தைக் கொணரமுடியும். உங்களைச் சந்திப்பதில் மகிழ்வடைகிறேன்.

சமுகத்தில் உங்கள வகிபாகம் மிகவும் முக்கியமானது. நாம் சாதி சமயம் பார்ப்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார். சந்திப்பில் பேரவையின் உயர்பீட உறுப்பினர்களான வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர் டாக்டர் எ.எல்.பாறூக் எம்.ஜ.இப்றாகிம் பாஸ்ரர் கிருபைராஜா பாஸ்ரர் கிறிஸ்தோபர் மௌலவி அன்சார் மௌலானா எம்.ஜ.ஹிமாயத்துல்லா ஆகியோர் கருத்துக்களைப் பரிமாறினர்.

பேரவைச் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா நன்றியுரையாற்றினார். நோன்பிற்கு மரியாதை கொடுக்குமுகமாக அவருக்களிக்கப்பட்ட உபசாரத்தை கண்ணியமாக ஏற்க மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும.

# புதிய வீடமைப்புத் திட்டம்



(கொழும்பு)


ஒருகொடவத்த புதிய தொடர்மாடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் துமிந்த சில்வா வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கான அடிக்கல், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் துமிந்த சில்வாவினால் நேற்று நாட்டப்பட்டது.

கொழும்பு நகரில் குறைந்த வருவாயை பெறுபவர்களுக்காக நிர்மாணிக்கப்படும் இந்த வீடமைப்பு செயற்திட்டத்தில் ஆயிரத்து 500 வீடுகள் உள்ளடங்குகின்றன. இந்த வீடமைப்பு வேலைத்திட்டம் 33 மாதங்களில் நிறைவடையவுள்ளதுடன், இதற்காக நான்காயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

5 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் இந்த வீடமைப்பு தொகுதியானது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் புனர்ஜனனிய வேலைதிட்டத்தின் 18 ஆவது செயற்திட்டமாக அமைந்துள்ளது.

இதன்போது, உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் துமிந்த சில்வா, கொழும்பு நகரில் குறைந்த வசதிகளுடன் வாழும் மக்களுக்காக புதிய வீடுகளை வழங்குவதே இந்த செயற்திட்டத்தின் நோக்கம் என குறிப்பிட்டார்.

# வர்த்தகர்களிடம் கப்பம் பெற்ற 16 வயது யுவதி கைது



(கொழும்பு)

சிறையில் தண்டனை அனுபவித்து வரும், பாதாள உலக குழுத் தலைவரான பொட்ட நவ்பர் எனக் கூறி, புறக்கோட்டை பகுதியில் உள்ள வர்த்தகர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு, இலட்சக்கணக்கில் பணத்தை கப்பமாக பெற்று வந்த திட்டமிட்டு செயற்படும் குழுவொன்று பற்றிய தகவல்களை கண்டறிந்த கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர், குழுவுடன் சம்பந்தப்பட்ட யுவதி ஒருவரை கைது செய்துள்ளனர்.

வர்த்தகர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் இந்த குழுவினர், குடும்பத்துடன் கொலை செய்ய போவதாக அச்சுறுத்தி இவ்வாறு கப்பத்தை பெற்று வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டு, வெலிகடைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மூன்று கைதிகள், இந்த குழுவை வழி நடத்தி வந்துள்ளனர்.

சுமார் 7 மாதங்களாக இந்த குழுவினர், புறக்கோட்டையில் உள்ள தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களை அச்சுறுத்தி இவ்வாறு இலட்சக்கணக்கான ரூபா பணத்தை கப்பமாக பெற்றுள்ளனர்.

பொட்ட நவ்பர் மீது வர்த்தகர்களுக்கு இருந்த பயம் காரணமாக, வர்த்தர்கள் எவரும் இது பற்றி, பொலிஸில் முறைப்பாடு செய்யாது, பணத்தை கொடுத்துள்ளனர்.

எனினும் இது தொடர்பில் புறக்கோட்டை வர்த்தகர் ஒருவர் செய்த முறைப்பாட்டை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர், குழுவுடன் சம்பந்தப்பட்ட 16 வயது யுவதி ஒருவரை காலி, உடுகம பிரதேசத்தில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் சிறையில் உள்ள தனது காதலரின் ஆலோசனைக்கு அமைய இந்த குழுவில் இணைந்து செய்யப்பட்டதாக விசாரண்ணையின் போது, கூறியுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளில் ஒருவரே இந்த பெண்ணின் காதலர் எனக் கூறப்படுகிறது.

சிறையில் இருக்கும் மரண தண்டனை கைதிகள், வர்த்தகர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடுகம வில் இருக்கும் யுவதியின் வங்கி கணக்கில் பணத்தை வைப்பிலிடுமாறு அச்சுறுத்தி வந்துள்ளனர்.

இவ்வாறு வங்கியில் வைப்பிலிடப்படும் பணத்தில் ஒரு பகுதியை தனது செலவுக்காக எடுத்து கொள்ளும், அந்த யுவதி, மீதி பணத்தை கப்பம் பெறும் குழுவின் தலைவரான தனது காதலருக்கு வழங்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# மாணவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் முயற்சி

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள்ளும் மாணவர் அடக்குமுறை இடம்பெறும் அச்சுறுத்தல் காணப்படுவதாக பல்கலைக்கழக் விரிவுரையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. அதிகாரிகள் மாணவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிப்பதாக சங்கத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

இதன் பின்விளைவுகள் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என அவர் சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழகங்களில் மாணவர் அடக்குமுறையால் ஏற்பட்ட பின்விளைவுகளைக் கடந்த காலங்களில் உணர்ந்ததாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் கூறினார்.

இது தொடர்பில் வினாவிய போது, மாணவர் அடக்குமுறைகள் எதுவும் காணப்படுவதில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம கூறினார்.

இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கான சில செயற்பாடுகளை பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் தவறிழைக்கும் மாணவர்களுக்கு அதற்கான தண்டனைகள் வழங்கப்படுவதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# சோளாவத்தை மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும்



(வேலணை)
வேலணை சோளாவத்தை பிரதேச மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென ஈ.பி.டி.பி யின் வேலணை பிரதேச இணைப்பாளரும், வேலணை பிரதேசசபைத் தவிசாளருமான சி.சிவராசா (போல்) தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வேலணை வடக்குப் பகுதியில் அமைந்துள்ள சோளாவத்தை பிரதேச மக்கள் நேற்று முன்தினம் வேலணை பிரதேசசபைத் தவிசாளரிடம் மின்சாரவசதி மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை தமக்கு பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

அதற்குப் பதிலளித்த வேலணை பிரதேச சபைத் தவிசாளர் மேற்படி விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய தீர்வினைப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்தார்.

# நல்லூர் கந்தன் உற்சவ காலத்தில் மாணவர்களுக்கான பண்ணிசை போட்டி

(ஈச்சமோட்டை)
நல்லூர் உற்சவ காலத்தில் பாடசாலை ரீதியில் பண்ணிசை பஜனையை மாணவர்கள் நல்லூர் ஆலயத்தில் பாடுவதற்கும், பாடசாலைகளிடையே குழுப்போட்டியை நடாத்துவதற்குமான ஏற்பாட்டினை வடமாகாண கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பான பயிற்சிப்பட்டறையும் கருத்தரங்கும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3.30 மணிவரை யாழ் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் சங்கீத பாட சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரையும் சைவசமய ஆசிரியர் ஒருவரையும் மேற்படி கருத்தரங்கில் பங்குபற்ற நெறிப்படுத்துமாறு யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக்கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களை கோரியுள்ளனர்.

பண்ணிசை பஜனை என்பவைற்றை 9ம் திருவிழாவிலிருந்து (21.08.2013) 22ம் திருவிழா வரை (02.09.2013) காலை உற்சவத்தின் போது நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (42)

# டெங்கு ஒழிப்பு

(வரணி)
வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் கடந்த சனிக்கிழமை சுகாதாரப் பகுதியினர் மற்றும் தொண்டர்கள் வீடுவீடாக சென்று டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். இவர்கள் வீடு வீடாகச சென்று மலசலகூடங்கள், கிணறுகளை துப்பரவு செய்து நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கிவருகின்றன. (150)

# போஷாக்கு விழிப்புணர்வு

(வேலணை)
வேலணை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவினரால் தமது எல்லைப்பரப்புக்குள் அமைந்துள்ள பிரதேசங்களில் போஷாக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி மண்டைதீவு, அல்லைப்பிட்டி,வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களைச சேர்ந்த மக்களுக்கு போஷாக்கு உணவு சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் இது சம்பந்தமான படங்களுடன் கூடிய விளக்கங்களையும் மக்களுக்கு வழங்கி வருகின்றனா. (ரு)

# ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிர சைவகலைப்பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வில் .இன்று வெள்ளிக்கிழமை எஸ்.ஜி சாந்தனின் பக்கவாத்திய சகிதம் பக்திமாலை இடம்பெறவுள்ளது.

# கவனிப்பாரற்ற நிலையில் நாவற்காடு-மிருசுவில் வீதி

(கொடிகாமம்)
வரணி சிட்டிவேரம் அம்பாள் ஆலயத்திற்கு அருகில் இருந்து ஆரம்பமாகி மிருசுவில் சந்தி வரையான வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வீதியானது பல இடங்களில் பாரிய குழிகளை கொண்டு காணப்படுவதாகவும், நாவற்காடு ப.நோ.கூ சங்கத்திற்கு அருகாமையிலும், குடமியன் அ.த.க.பாடசாலைக்கு அருகாமையிலும் உள்ள வீதியானது மிகவும் பாவிக்க முடியாமல் இருப்பதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கடந்த வருடத்தில் இவ்விரு இடங்களிலும் களிமண் பறிக்கப்பட்டதனால் மாரிகாலத்தில் பாடசாலை மாணவர்கள் முதியவர்கள் முதலானவர்கள் பல்வேறு கஸ்ரங்களை அனுபவிப்பதுடன் தற்பொழுது இவ்வீதியில் சிவப்பு மணல் பறிக்கப்பட்டிருப்பதால் இதுவும் பாவனைக்கு உதவாத மணலாக காணப்படுதாகவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து இவ்வீதியினை உரிய முறையில் திருத்தி பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் முதலானவர்களின் போக்குவரத்து கஸ்டங்களை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# குடா நாட்டில் தற்போது திருட்டுக்கள் அதிகரிப்பு

(அச்சுவேலி)
. யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் தற்போது திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக பொது மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேலும் தமது அன்றாடத் தேவைகளுக்காக வீட்டை விட்டு வெளியே செல்வதற்கும் பொதுமக்கள் அஞ்சுகின்றனர். மேலும் கோயில் திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகளுக்குச் செல்லும் போது தங்க நகைகளை அணிந்து செல்வதற்கும் பெண்கள் அஞ்சுகின்றனர்.

சில வீடுகளுக்குள் திருடர்கள் அத்துமீறி உள் நுழைந்து கத்தி முனையில் வீட்டு நபர்களை அச்சுறுத்தி விட்டு வீட்டு உடமைகளை கொள்ளையடித்துச் செல்கின்றனர். எனவே குடாநாட்டு மக்கள் அனைவரும் திருடர்களின் பயப்பீதியுடனேயே தமது இரவுப்பொழுதைக் கழித்து வருகின்றனர்.

எனவே இவ்வாறு திருட்டு நடவடிக்கையில் ஈடுபடுவோரை உரியவர்கள் இனம் கண்டு சட்டத்தின் முன் அவர்களை நிறுத்தவேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (85)

# முரசின் இன்றைய பலன்



(12.07.2013 -வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 28 ஆம் திகதி.மகநட்சத்திரம் பி.ப 04. 53 வரை
மரணயோகம் ,சதுர்த்திவிரதம். சதுர்த்தி திதி
இராகுகாலம 10.29- 11 .59 வரை.சுபநேரம 05.59- 07.29வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** சகோதர உறவில் திருப்பம்,அல்சர்நோய் குணமடைதல்,புதிய காரியத்திற்கு நண்பனின் கடன் உதவி, பிதாவின் தேக சௌக்கியத்தில் திருப்தி, கையடக்க தொலைபேசி மூலம் காதல் மலர்தல், பணம் தொலைந்து போதல், உணவினால் நோய் ஏற்படல், தானதர்மச்சிந்தனை,உணர்ச்சி வேகத்தில் வார்த்தைகளைக் கொட்டி கவலையடைதல்.

**ரிஷபம்** இழுபட்ட விவாகத்திற்கு சம்மதம்,எதிர்பாராத காதல்,பெற்றோர் மத்தியில் ஒற்றுமை, புத்திரப்பேறு, சத்திரசிகிச்சை வேண்டாமென கூறுதல்,வெளியூர் பயணம் பற்றிய சுபசெய்தி, வங்கிக்கடனால் வசந்தம், கோழிவளர்ப்பினால் இலாபம்,தவறிய பொருள் கிடைத்தல்,கண் சம்பந்தப்பட்ட நோய்ஆபத்தில் நண்பரின் உதவி.

**மிதுனம்** புத்திரர்பற்றிய கவலை நீக்கம், குழந்தைப் பாக்கியம்,மனைகோலும் எண்ணம், வதந்தியால் மனத்துயர்,புதியன கொள்வனவு, வாகனத்தை விற்கும் திட்டம்,மின்சாரக்கேட்டால் தொழில் மந்தநிலை, ஆவணங்கள் தவறிப்போதல்,பயணம் இடைத்தங்கல் நாட்டில் இறக்கிவிடல், விற்பனைப் பொருட்கள் பழுதால் கவலை.

**கடகம்** மாணவர் விசா கிட்டும்யோகம்,நட்டமென எதிர்பார்க்க இலாபம் கிடைத்தல்,தாயாரின் தேகநலமேம்பாடு,அரசு தனியார் துறையில் வேலைவாய்ப்பு,தொலைபேசி மின்சாரவசதி கிடைத்தல்,நட்டஈடு,புதிய மனைத் திட்டத்திற்கு சிபார்சு,தொழிலாளர் உறவில் திருப்தி புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடல், சுபகாரியச்செலவு.

**சிம்மம்** குருபெயர்ச்சி நன்மைகளைத்தருதல்,புத்திர பாக்கியம்,சத்திரசிகிச்சையினால் வருத்தம் தணிதல், பணவரவு,காதலில் மகிழ்வு,பிதாவின் கருணை மாதாவின் உடல்நலம் தேறல்,வெளியூரின்றும் மகிழ்ச்சிகரமான கடிதம், கௌரவிக்கப்படல், விளையாட்டுத் துறையில் ஜொலித்தல்,நீதிமன்றத்தீர்ப்பு சாதகமாதல்.

**கன்னி** கைவிட்டிருந்த பிரயாணம் தொடரும் எண்ணம், தற்காலிகமாக இடமாற்றம் ரத்து, வங்கியில் கடனுக்கு விண்ணப்பம், காதலில் சோதனை, குழந்தைப் பிரசவத்திற்கு சத்திரசிகிச்சை,நகை அணிந்து செல்வதால் திருடர்பயம்,கிரகசாந்திக்கு ஆலயம் செல்லல், மருத்தீடு பில்லி சூனியம் பற்றிய பயஉணர்ச்சி

**துலாம்** தந்தையால் உதவி கிட்டல்,ஏழரைச்சனியாதலால் பொறுமையினால் வெற்றி,இதயநோய்பற்றிய கவலை, கைவிட்ட பயணம் தொடங்கும் விருப்பம்,போக்குவரத்து விதி மீறி தண்டம்,பிதாவினால் நன்மை,சொத்துப்பற்றிய பிரச்சினை,எதிர்பாராத இலாபம்,திருமணம் பற்றிய சுபசெய்தி.

**விருச்சிகம்** முற்றாகும் நிலையில் காணப்பட்ட விவாகம் ஸ்தம்பிதம்,எதிரியால் துன்பம்,கணக்கு வழக்கால் துயரம்,சுவீப்பில் பணம்,வெளியூர் பயணத்திற்கான செய்தி,சமாந்தர பிரயாணத்தினால் தண்டம், அதிகாரியினால் உயர்விற்கு சிபார்சு.

**தனுசு** விவாகத்திற்காக மதம் மாறும் யோசினை,இருமல் சளிப்பிரச்சினை,மூத்த சகோதர உதவி,கருத்து வேறுபாடு அகலுதல்,வங்கித்தொடர்பால் நன்மை, கடன்வாங்கியவரைத்தேடி அலைதல், வாகனயோகம், மக்களினால் பெருமை,குழந்தைப்பேறு.

**மகரம்** நம்பிநடந்ததால் மோசடி,எதிர்பாராத இடமாற்றச் செய்தி,நஷ்டத்தில் தொழிலைக் கைவிட சிந்திப்பு, சூதாட்டத்தினால் தண்டனை புள்ளி குறைவினால் வேலை பாதிப்பு, நேர்முகத் தேர்வு, முழங்கால்களில் வலி வேதனை. இளைய சகோதரத்தால் உதவி, கடனால் அவமானம்.

**கும்பம்** பயணத்திற்கான ஏற்பாடு பதவிக்கான கடிதம், ஆரோக்கியம், சுவீப்பில் பணம், குழந்தைப்பேறு, நினைத்தது நடக்கும் அதிர்ஷ்டம்,வைராக்கியத்தால் மதியாமை,வெளியூர் பெண்ணை திருமணம் முடிக்கும்யோகம்,நோய் கட்டுப்பாட்டில் சொத்தப் பிரச்சினைக்கு சட்டத்தை நாடல்,திடீர் நட்பினால் ஆபத்து.வங்கிக்கடன் பெறல்.

**மீனம்** மனை வாகனம் பூமி கொள்ள சுபச்செலவு, எதிர்பாராத எதிரியின் சந்திப்பு,இடப்பக்க உறுப்பு நோயினால் பாதிப்பு ,பணம் எடுத்துச்செல்வதில் கவனம்,விருந்துபசாரம்,இடைத்தங்கல் நாட்டில் இறங்குதல்,புத்திமதி கேட்டதால் நன்மை,ஆயுத பயம்,திருட்டுப்போனது கிடைத்தல்.சுவீப்அதிஷ்டம்.

# மஹேலவின் மைல்கல்



(போர்ட் ஓப் ஸ்பெயின்)

இலங்கை அணியின் முன்னாள் கப்டன் மஹேல ஜெயவர்த்தன நேற்றைய தினம் புதிய மைல் கல்லை எட்டியுள்ளார்.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் 400 ஆவது ஒரு நாள் போட்டியில் ஆடிய மூன்றாவது வீரர் என்ற சிறப்பை நேற்றைய தினம் மஹேல ஜெயவர்த்தன பெற்றுக் கொண்டார். மேற்கிந்தியத் தீவுகளில் நேற்று நடைபெற்ற முத்தரப்பு ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி மஹேல ஜெயவர்த்த னவுக்கு 400ஆவது ஒரு நாள் போட்டியாக அமைந்தது. இதுவரை 11ஆயிரத்து 237 ஓட்டங்களைப் பெற்றுள்ள மஹேல 16 சதங்களையும், 70 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார். இதில் அதிக ஒரு நாள் போட்டிகளில் விளையாடி வீரர் என்ற சாதனை இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் பெற்றுள்ளார். சச்சின் 463 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். இரண்டாமிடத்தை இலங்கை முன்னாள் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெய சூரிய பெற்றுள்ளார். சனத் 445 ஒரு நாள் போட்டி களில் ஆடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விக்கெட் வேட்டை அமர்க்களம்


(லண்டன்)

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக் கிடையிலான ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் 14 விக்கெட்டுக்கள் இரு அணிகளாலும் சாய்க் கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் இங்கிலாந்தின் நேட்டிங்ஹொமில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங் கிலாந்து அணி, பீற்றர் சிடிலின் பந்து வீச்சுக்கு தாக்குப்பிடிக்கு முடியாமல் விரை வாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ரூத், ட்ரொட் ஓரளவுக்குத் தாக்குப் பிடிக்கு அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரூத் 30, ட்ரொட் 48, இயன் பெல் 25, புரொட் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பீற்றர் சிடில் ஐந்து, பட்டின்சன் மூன்று, ஸ்ரார்க் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, ஆரம் பம் முதலே தடுமாறியது.குறிப்பாக,அண்டர் சன், ஸ்ரீபன் பின் ஆகியோரின் பந்து வீச்சு அவுஸ்ரேலிய அணியின் முன்நிலை துடுப் பாட்ட வீரர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இருப்பினும் ஸ்மித் நிதான-மாக ஆடினார். இறுதியில் முதல் நாள் நிறைவுக்கு வந்தவேளை, அவுஸ்ரேலிய அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஸ்மித் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அண்டர்சன், ஸ்ரீபன் பின் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆறு



விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி 140 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இதே வேளை, முதல் நாள் ஆட்டத்தில் இரு அணிகளாலும் 14 விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மைதானம் பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக இருக்கின்றது. நான்கு நாட்களிற்கிடையிலேயே போட்டி நிறைவுறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நம்புகின்றோம். ஏனெனில் மைதானம் பந்து வீச்சுக்கு அதிக சாதகமாக இருக்கின்றது என இங்கிலாந்து அணி யின் முன்னாள் கப்டன் ஸ்ரோர்ஸ் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# ஏ அணியில் வோர்னர்

(சிட்னி)

சிம்பாப்வே, தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ள அவுஸ்ரேலிய ஏ அணியில் அதிரடி வீரர் டேவிட் வோர்னர் இணைக்கப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது மதுபாரில் இங்கிலாந்து வீரர் ஜோரூட்டை தாக்கியதால் நீக்கப்பட்ட அவுஸ் ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் ஆஷஸ் தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் இடம் பிடித்து இருந்தார். ஆனால் ஆடும் 11 பேர் அணியில் டேவிட் வோர்னருக்கு இடம் அளிக்கப்படவில்லை. இந்த நிலையில் அவுஸ்ரேலிய அணியில் டேவிட் வோர்னர் விடு விக்கப்பட்டுள்ளார். இது குறித்து அவுஸ்ரேலிய அணியின் ஜான் இன்வெராரிட்டி அளித்த பேட்டியில், டேவிட் கடுமையாக பயிற்சி எடுத்தார். அணியினருக்கு நல்ல உதவிகரமாக கடந்த சில வாரங்களாக இருந்தார்.

இருப்பினும் முதல் டெஸ்டில் விளையாடும் அளவுக்கு தயாராக வில்லை. அவர் ஆட்டங் களில் விளையாடி பயிற்சி பெற வேண்டியது அவசியமானதாகும். எனவே சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்காவில் பயணம் செய்யும் அவுஸ்ரேலிய ஏ அணியில் இடம் பிடித்து விளையாடுவார். அது நல்ல பயிற்சி வாய்ப்பாகும் என்றார்.




# அயர்லாந்து தகுதி

உலகக் கிண்ண லீக் சம்பியன்சிப் போட்டியில் நெதர் லாந்தை வீழ்த்திய அயர்லாந்து அணி 2015ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலக கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை அவுஸ்ரேலியாவும் நியூ சிலாந்தும் இணைந்து நடத்துகின்றன. இந்தநிலையில் அயர்லாந்து 3ஆவது முறையாக உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இருக்கிறது. நெதர்லாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் ஆம்ஸ்டெர்டாமில் நடைபெற்ற போட்டியில் அபாரமாக விளையாடியது அயர்லாந்து. இப்போட்டியில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றதன் மூலம் அந்த அணி உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. உலக கோப்பை போட்டிக்கு தகுதி பெற்ற அசோசியேட் நாடான அயர்லாந்துக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) பாராட்டு தெரிவித்துள்ளது.

# பிரிட்டிஷ் வீரர் மீது சிறுநீர் வீச்சு



(மாண்ட் செயின்ட்)

பிரிட்டிஷ் சைக்கிள் பந்தய வீரர் மீது இரசிகர் ஒருவர் சிறு நீர் வீசியுள்ள சம்பவம் ஒன்று இங்கிலாந்தில் இடம பெற்றுள்ளது.

பிரபலமான டூர் டி பிரான்ஸ் என்ற சைக்கிள் போட்டி ஐரோப்பிய நாடுகளில் பிரசித்தி பெற்றது. 1903ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்போட்டி பெரிதடைந்து இன்று உலகம் முழுவதிலுமிருந்து வீரர்கள் இதில் கலந்து கொள்கின்றனர். ஆண்டு தோறும் ஜூலை மாதம் நடத்தப்படும் இப்போட்டி 23 நாட்களில் 21 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 3,200 கி.மீற்றர்களை கடந்து வீரர்கள் வெற்றி பெறுகின்றனர்.

இந்த ஆண்டுப் போட்டியின் 11ஆவது பிரிவு நேற்று முன்தினம் நடைபெற்றது. நார்மண்டியில் உள்ள அவரேன்ச்சிலிருந்து மாண்ட் செயின்ட் மைக்கல் வரையில் 33 கி.மீ குறிப்பிட்ட நேரத்தில் கடப்பதற்கான போட்டியாக இது நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் செயின்ட் மாலோவில் நடைபெற்ற போட்டியின்போது டென்மார்க் வீரர் டாம் வீலர்ஸ் கீழே விழ நேரிட்டது. அதற்கு பிரிட்டிஷ் வீரரான மார்க் கவேன்டிஷே காரணம் என்ற கருத்தும் எழுந்தது.

எனவே, நேற்றைய போட்டியில் பங்கு பெற மார்க் கவென்டிஷ வந்தபோது கோபமடைந்த பார்வையாளர் ஒருவர் அவர் மீது சிறுநீரை வீசியுள்ளார். இதனை அவரது குழுவினரும் உறுதி செய்தனர். மார்க் இதுகுறித்து கோபமடையவில்லை என்றபோதி லும், வீலர்ஸ் விழுந்ததற்கு தான் காரணமில்லை என்பதால் இந்த செயலால் மிகவும் வருத்தமடைந்தார் என்று கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் நடந்த சம்பவத்தினால் கோபமுற்ற சில பார்வையாளர்கள் அவரை விமர்சித்தனர். அதில் ஒரு முட்டாள் சிறுநீரை அவர் மீது வீசியுள்ளான் என்று ஒமேகா குழுவின் முக்கிய நிர்வாகத் தலைவர் பாட்ரிக் லெபிவெரே தெரிவித்தார். எப்போது இது நடந்தது என்று கூற முடியாத அவர், மார்க்கின் சக வீரர் போட்டியில் வென்றவுடன் அதுகுறித்து பேசுவதைத் தவிர்த்தார். ஆயிரக்கணக்கானோர் கூடுமிடத்தில் எல்லோரும் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து இரு வீரர்களும் மற்றவரைக் குறை கூறிக் கொண்டபோதிலும், இறுதியில் மார்க், டாம் வீலர்சிடம் மன்னிப்பு கேட்டதாகவும், எனவே இதன்மூலம் இந்தப் பிரச்சினை முடி விற்கு வந்ததாகவும் லெபிவெரே நம்பிக்கை தெரிவித்தார்.



# விருதிற்கு பரிந்துரை

(நியான்)

ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பின் சிறந்த கால்பந்து வீரர் விருதுக்கு, மெஸ்சி, றொனால்டோ உள்ளிட்ட 10 முன்னணி வீரர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.


கடந்த 2011 ஆண்டு முதல் ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பில் (யூ.இ.எப்.ஏ.,) இடம் பெற்றுள்ள கிளப் அணிக-ளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு, ஆண்டு தோறும் சிறந்த வீரருக்கான விருது வழங்கப்படும். இவ்விருதை 2011இல் பார்சிலோனா அணிக்காக பங்கேற்ற மெஸ்சி தட்டிச்சென்றார். 2012இல் பார்சிலோனாவின் இனியஸ்டா வென்றார்.

இந்த ஆண்டு கிளப் அணிகளில் சிறப்பாக செயல்பட்ட 10 வீரர்கள் கொண்ட பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில் மெஸ்சி (பார்சிலோனா), கிறிஸ்டியானோ றொனால்டோ (ரியல் மட்ரிட்), கெராத் பேல் (டாட்டன்ஹாம்), இப்ராகிமோவிச் (பாரிஸ் செயிண்ட் ஜெர்மியான்), ராபர்ட் லீவான்டோவிச் (போரிஸ் டிராட்மண்ட்), றொபின் வான் பெர்சி(மான்செஸ்டர் யுனைடட்) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இவர்களை தவிர, பேயர்ன் முனிக் அணியின் தோமஸ் முல்லர், பிரான்க் ரிபரி, அர்ஜன் றொபன், போஸ்டின் ஆகி-யோரும் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர். சிறந்த வீரருக்கான விருது வரும் ஆக., 29இல் மொனாகோவில் நடக்கும் சம்பியன்ஸ் லீக் தொடரின் அட்டவணை அறிவிப்பின் போது வழங்கப்படும்.

விளையாட்டுச் செய்திகள்

# டன்சன் சிறப்புப் பந்து வீச்சு வென்றது சென். பற்றிக்ஸ்



(யாழ்ப்பாணம்)

டன்சனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 64 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டமொன்று அண்மையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி டனியல், டன்சன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டனியல் 48, டன்சன் 28, சறோசன் 25 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் சுபாஸ்கர் நான்கு, கருண்யன், அஜேய் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி, டன்சனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 24 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுசன் 15, டனியல் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டன்சன் ஐந்து ஓவர்கள் பந்து வீசி மூன்று ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக மூன்று ஓட்டங்களைக்கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (எஸ்.பி.)

# நீச்சலில் அசத்தியோர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியர் கல்லூரியின் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை வீரர்களுக்கிடையில் நீச்சல் போட்டி நடாத்தப்பட்டது. அண்மையில் நடாத்தப்பட்ட இந்நீச்சல் போட்டி காரைநகர் இறங்கு துறையிலிருந்து ஊர்காவற்றுறை இறங்குதுறை வரை இடம்பெற்றது.

இதில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியர் கல்லூரியின் வீரர்கள் 15, 17, 19, 21 என நான்கு வயதுப் பிரிவு-களாக நடாத்தப்பட்டது.

15 வயதுப் பிரிவில் ரி. வனோஜன் முதலாமிடத்தையும், எஸ். பபிலோன் இரண்டாமிடத்தையும், ஏ. தனுசன் மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டனர்.

17 வயதுப் பிரிவில் எம். யுலிற்றன் முதலாமிடத்தையும், ஆர். ரனிசன் இரண்டாமிடத்தையும், எஸ். சசிக்குமார் மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டனர்.

19 வயதுப் பிரிவில் எஸ். சதீஸ்குமார் முதலாமிடத்தையும், ஜே. சிந்துஜன் இரண்டாமிடத்தையும், ஏ. ஜோயல் மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டனர்.

21 வயதுப் பிரிவில் வி. ஜொஜிபன் முதலாமிடத்தையும், ஏ. அன்ரனி யூட்சன் இரண்டாமிடத்தையும், எம். ஆனட் சரண்சன் மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டனர்.

கல்லூரி அதிபர் அருட்தந்தை கே. ஜேம்ஸ் சிங்கராஜர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் ஊர்காவற்றுறை கடற்படை அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (65)

# மானிப்பாய் பரிஷின் ருவென்ரி-20 கொக்குவில் கே.சி.சி.சி. இலகு வெற்றி

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி இலகுவான வெற்றிபெற்றது.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ருவென்ரி -20 கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.


இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், நியூஸ்ரார் அணியும் மோதின.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூஸ்ரார் அணி சிலோஜனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவெனவிக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் தசரி பொறுப்புடன் ஆடினார். இறுதியில் நியூஸ்ரார் அணி 17.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தசரி 48, றமணன் 21, சஞ்சீவ் 12 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் சிலோஜன் மூன்று, பார்த்தீபன், பசிதரன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 117 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி.அணி 16 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சத்தியன் 29, ராகுலன் ஆட்டமிழக்காது 26, உமாநாத் 20, பங்குஜன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். அடுத்த லீக் ஆட்டத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி ஸ்ரீகாமாட்சி அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42)

# வடமாகாண மட்ட ரெனிஸ்

## சென். ஜோண்ஸ், சுண்டிக்குழி சம்பியன்





(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட ரென்னிஸ் போட்டியில் சென். ஜோண்ஸ் மற்றும் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட ரென்னிஸ் போட்டி அண்மையில் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 12 வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகள் அணிகள் பங்குகொண்டன.

ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டி 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் மட்டுமே நடாத்தப்பட்டது.

இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை சென் ஜோண்ஸ் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணியும் பிடித்துக்கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை சுண்டிக்குழி மகளிர் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணியும் பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் கைகலப்பு



(கண்டி)

கண்டியில் நடைபெற்ற றகர் போட்டியின் போது வீரர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பினால் படுகாயமடைந்த நான்கு வீரர்கள் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி கிங்ஸ்வுட் கல்லூரிக்கும் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியர் கல்லூரிக்கும் இடையில் கண்டி போகம்பறை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற றகர் போட்டியிலேயே இந்த கைகலப்பு ஏற்பட்டுள்ளது.


இந்த மோதல் காரணமாக போட்டியும் இடை நிறுத்தப்பட்டது. இம் மோதலினால் காயமடைந்த இரு அணிகளையும் சேர்ந்த வீரர்கள் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போட்டியில் மோதல் ஏற்படும் பொது கிங்ஸ்வூட் கல்லூரி 2 பெனல்டிக் மூலம் 6 புள்ளிகளையும் புனித அந்தோனியார் கல்லூரி 1 ட்ரை மூலம் 5 புள்ளிகளையும் பெற்றிருந்தது. அவ் வேலையிலேயே இரு அணிகளைச்சேர்ந்த வீரர்கள் ஒருவரை ஒருவர் மாறிமாறித் தாக்கிக் கொண்டனர்.

இதன்போதே நான்கு வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த போட்டியின் போது கூடுதலான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையினால் மோதல் உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 13ம், தெற்கின் இடதுசாரி ஜனநாயக சக்திகளும்...

- சுகு-ஸ்ரீதரன் கட்டுரையிலிருந்து.



**13**ஆவது திருத்த சட்டத்தின் காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கும் இனவாத பிரசாரங்களுக் கெதிராக இடதுசாரிகளும் தெற்கின் ஜனநாயக சக்திகளும் உறுதியாக குரல் கொடுப்பது சமூகங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான நல்ல தருணமாகும். திட்டவட்டமாக நறுக்கு தெறித்தாற்போல் விடயங்களைச் சொல்வது தமிழர் தரப்பில் அரிதாகவே காணப்படுகிறது.

13ஆவதைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசுவதில் தமிழர்தரப்பில் ஒரு தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 25 வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசியல் யாப்பில் அங்கமாகி விட்ட 13ஆவதை இல்லாதொழிப்பதற்கான போராட்டம் பேரினவாதிகளால் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தாலும் தமிழர் தரப்பில் 13ஆவதற்கு ஆதரவான உறுதியான குரல் வெளிப்படுத்தப்படவில்லை.

இப்போது அதற்கு சாவு மணி அடிப்பதற்கான முயற்சிகளுக்கெதிராக இடதுசாரிகளும் ஜனநாயக சத்திகளும் உறுதியான எதிர்ப்பை தெரிவித்துள்ளார்கள்.

தமது அமைச்சரவை பதவி போனாலும் பரவாயில்லை என்றளவிற்கு வாசு, ராஜித, டிலான் போன்றவர்கள் கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

டியூ, திஸ்ஸ, வாசு, டிலான், ராஜித போன்றவர்கள் உட்பட பலர் தமது ஆட்சேபனையை பதிவு செய்திருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் முஸ்லீம் ஜனநாயக சக்திகள் இவர்களுடன் இணைந்து செயற்படவேண்டிய தருணம் இதுவாகும்.

இந்த சக்திகள் தனிமைப்படுவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

13ஆவதில் பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கும் திருத்தம் செய்யக் கூடாது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் கிட்டாது என இவர்கள் உறுதி-படத் தெரிவித்திருக்கிறார்கள்.

இது எல்லாம் எமக்குத் தேவையில்லை. உலகம் எமக்கு இன்னொரு கொசோ-வாவை பெற்றுத் தரும் என்ற குரல்கள் எல்லாம் போகாத ஊருக்கு வழி சொல்லும் மோசடியாகும்.

நாங்கள் ஏதோ ஒரு இடத்தில் இருந்து தான் ஆரம்பிக்க முடியும். உண்மையான அர்த்தத்தில் இலங்கையை பல்லினங்களின் நாடாக மேம்படுத்துவதற்கு ஏதாவதொரு இடத்தில் ஆரம்பிக்க வேண்டும். அது 13ஆவதாகத்தான் இருக்கிறது.

இதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டு யதார்த்தமில்லாத சூனியத்திலிருந்து விடயங்களைத் தொடங்க முடியாது. கனவு காண்பது நல்லதுதான். ஆனால் மக்களின் இருப்பு, பாதுகாப்பு என்பவற்றிற்கு உத்தரவாதமில்லாத கனவுகளால் பிரயோசனமில்லை.

உசுப்பேத்தும் கவர்ச்சிகரமான சொற்சிலம்பங்களைவிட யதார்த்தமான அணுகுமுறைகளே இன்று தேவைப்படுகின்றன. பொறுமையும், தூரநோக்கும் கொண்ட அணுகுமுறை இன்று தமிழர் தரப்பில் தேவைப்படுகிறது.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்பதே எமது 30 வருட அனுபவமாக இருக்கிறது. எனவே நிதானம் தேவை.

தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்களும் தெற்கின் இடதுசாரி ஜனநாயக சக்திகளும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சேர்ந்து செயற்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தை இழந்து விடக் கூடாது. குறிப்பாக தமிழ்த்தலைமைகள் இந்த இடதுசாரி ஜனநாயக சக்திகளுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும். இன்று அரசுக்குள்ளேயும் வெளி-யேயும் அவர்கள் தனித்து குரல் கொடுக்கிறார்கள்.

அவர்களுடன் எம்மையும் இணைத்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் பிரச்சினை தீரவேண்டும் என்று விருப்பம் உள்ளவர்கள் அதனைத்தான் செய்வார்கள். ஆனால் மக்களின் பிரச்சினைகளில் மானசீகமான அக்கறை இல்லாதவர்கள் உசுப்பேத்தி தேர்தல்களில் வெற்றி பெறுவதிலேயே குறியாக இருப்பார்கள்.

இந்த உசுப்பேத்தும் அரசியல் எத்தகைய விபரீதங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று நாம் ஆற அமர இருந்து சிந்தித்தால் புரியும்.

---

# பெண் மொழியும் ஆண் மொழியும் ஒன்றாகும் போது

- ஆர். அபிலாஷ் -

**பெ**ண்கள் சந்தித்துக் கொள்ளும் போது சுவிட்ச் போட்டாற்போல பேச ஆரம்பிப்பார்கள். என்ன பேசலாம் என்கிற தயக்கமெல்லாம் அதிகம் இருப்பதில்லை. பெண்கள் தம்மிடையே ஒரு உணர்வுபூர்வ கனெக்ஷனை எளிதில் உருவாக்குவார்கள். அது அவர்களின் வலிமை.

ஒரு பெண் மனசை இன்னொரு பெண்ணால் தான் புரிந்து கொள்ள முடியும் என்று நம் சினிமாவில் அடிக்கடி ஒரு வசனம் வரும். ஆனால் நடைமுறையில் இது உண்மையா?

உணர்வுப் பகிர்தலுக்கு ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் தான் சரி. ஆனால் எண்ணங்களை பகிர, பிரச்சினைகளை அலச ஒரு ஆண் தான் நல்ல துணை என பல பெண்களே கூறுகிறார்கள். பிரச்சினை என வந்தால் பெண்கள் அதற்கு உணர்வு பூர்வமான ஆதரவைத் தேடுவார்கள், ஆனால் ஆண்களோ அதற்கு தீர்வைத் தர முயல்வார்கள் என உளவியல் கூறுகிறது. மனசை வெறும் இதயம் என நினைத்தால் அந்த சினிமா வசனம் சரி. மூளையையும் சேர்த்தால் தப்பு.

பெண்கள் சேர்ந்து நடக்கும் போது கைகளை பற்றி இருப்பதை கவனித்திருப்பீர்கள். அதே போல் சந்திக்கும் போதும் பேச்சின் இடையே ஆதரவை தெரிவுக்கும் பொருட்டும் அவர்கள் கைகளை பற்றி தோளை வருடி முதுகை தட்டிக் கொடுப்பார்கள். பெண்களின் பேச்சில் தொடுகைக்கு தனி இடம் உண்டு. இளம் பெண்கள் தோழியரின் கன்னத்தை கிள்ளி விடுவார்கள். கூந்தலை தொட்டுப் பார்ப்பார்கள். மிக முக்கியமாக இரு பெண்கள் சந்தித்ததும் ஆடை, அணிகலன் பற்றி பாராட்டாமல் இருப்பது அபூர்வம். ஆனால் ஒரு ஆண் என்னதான் அழகான புது சட்டை போட்டு வந்திருந்தாலும் அலுவலகத்தில் இன்னொரு ஆண் கவனித்ததாகவே காட்டிக் கொள்ள மாட்டான்.

இரண்டு ஆண்கள் சந்தித்தால் என்னவெல்லாம் பேசுவார்கள்? தம்முடைய வேலையை பற்றி, சினிமா, அரசியல் போன்ற புறவிசயங்கள் பற்றி அதிகம் அரட்டையடிப்பார்கள்.



அரிதாகவே ஒரு ஆண் இன்னொருவனின் விரலைபற்றி என்ன உன் முகம் சோர்ந்து போய் இருக்கிறது எனக் கேட்பான். அன்று காலை தான் ஒரு பெரிய தனிப்பட்ட நெருக்கடிக்காக மனம் வருந்தி கொஞ்சம் அழுதிருப்பார்கள். ஆனால் வெளியே வந்து நண்பர்களை சந்தித்ததும் ஒன்றுமே நடக்காதது போல அன்றாட அரசியல், உலக பிரச்சினை, சீதோஷ்ண நிலை, நகராட்சியின் செயல்பாடு என கருத்துக்களின் அளவிலேயே பேசி அதில் மூழ்கி விடுவார்கள். ஆண்களுக்கு தம் பிரச்சினைகளை பொதுவில் பேச பயம் மற்றும் கூச்சம். பெண்கள் அப்படி அல்ல. அன்று காலை அவசரமாக குளித்து சாப்பிட்டது முதல் பேருந்தில் பயணித்து இறங்கினது வரையில் நடந்த சின்ன சின்ன விசயங்களை அலுவலகம் போய் முதல் வேலையாக விலாவரி யாய் தோழியிடம் விவரிப்பார்கள். அவர் நிறுத்தினதும் தோழி தன்னுடைய காலைப்பொழுதின் அவஸ்தைகளை விவரிப்பார்.

பெண்கள் தம் உடல் தோற்றம் மீது காட்டும் அக்கறை ஆரோக்கியமான மனநிலையை காட்டக் கூடியது என்கிறார்கள் உளவியலாளர்கள். ஆண்கள் அலுவலகம் வந்ததும் ஹெல்மட்டில் இருந்து கலைந்த தலையும் வியர்வை வீச்சமடிக்கும் உடையுமாக உட்காருவார்கள். உட்கார்ந்து சுற்றும் முற்றும் ஏதாவது குறையிருக்கிறதா என தேடுவார்கள்.

பெண்களின் உலகம் உணர்ச்சிகளால் ஆனது. உணர்ச்சி தான் அவர்களின் மொழி. மூன்று பெண்கள் பேசும் போது பாருங்கள். ஒரே சமயம் எல்லாரும் பேசுவார்கள். அவர்களுக்கு பேச அவ்வளவு பிடிக்கும். பொதுவாக பேச்சுத்திறன் தேவைப்படும் வேலைகளில் பெண்கள் முன்னணியில் இருப்பார்கள். உதாரணமாக, ஊடகம், ஆசிரியப் பணி, நிர்வாகம். இன்னும் முக்கியமாக குடும்பம்.

ஒரு ஆணை முதலில் சந்திக்கும் பெண் அவன் எப்படி பேசுகிறான், என்னமாதிரி ஆடை அணிந்திருக்கிறான் என இரண்டையும் உன்னிப்பாக பார்க்கிறார்கள். கண்ணியமாக ஆனால் சுவாரஸ்யமாக பேசுகிற, நேர்த்தியாக ஆனால் மிகையின்றி ஆடையணிகிற ஆண்களை அங்கீகரிக்கிறார்கள். பெண்களை எளிதில் கவர்கிற ஆண்கள் இவ்விசயத்தில் அதிகவனமாக இருப்பார்கள். நான் வேலை பார்த்த இடத்தில் ஒரு 58 வயதான பேராசிரியர். அவருக்கு ஒருநாள் திடீரென்று மாரடைப்பு வந்து விழுந்து விட்டார். ஆனால் பிழைத்து விட்டார். நாங்கள் எல்லாம் பரிதாபப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்போது ஒரு பெண் பேராசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார்: “அன்று அவர் அவ்வளவு அழகான சட்டை அணிந்திருந்தார். பார்க்க பளிச்சென்று அழகாக இருந்தார் என்று யோசிச்சேன். ஆனால் இப்படி ஆயிடுச்சே. ரொம்ப வருத்தமாக இருக்கு”. இதுவே ஒரு ஆண் என்றால் “பாவம் நல்ல மனுசன். பார்த்தா அன்பா பேசுவார். நல்ல ஆசிரியர் கூட.” என்று அவரது ஆளுமையை கணக்கிடுவார்.

கணவன், மனைவி நிறைய பேச வேண்டும், பேசிக் கொண்டே இருக்க வேண்டும், அப்போது தான் அந்த உறவு ஆழம் பெறும் என்றார் எழுத்தாளர் சுந்தரராமசாமி. பேசினாலே சண்டை வருகிறது என நிறைய குடும்பங்களில் கணவன், மனைவி பேசுவதே இல்லை. அல்லது ஒரு கட்டத்துக்கு மேல் பேச ஒன்றுமே இல்லை என தோன்றுகிறது. பெண்கள் கொஞ்சம் ஆண்களின் மொழியிலும் ஆண்கள் கொஞ்சம் பெண்களின் மொழியிலும் பேசினால் இந்த பிரச்சினை எல்லாம் தீர்ந்து போகும்.

# 40 ஆண்டுகள் உறங்காமல்...



எத்தனை நாட்கள் உங்களால் தூங்காமலிருக்க முடியும்? ஒரு நாள்... இரண்டு நாள்.. மூன்று நாள் என்று நாள் கணக்கைத்தான் சொல்லுவீர்கள்.

தாய்நொக் என்பவர் வியட்நாமைச் சேர்ந்தவர். 1973 இல் இவருக்குக் காய்ச்சல் வந்தது. சில நாட்களில் காய்ச்சல் போய்விட்டது. அதோடு தூக்கமும் போய்விட்டது. நாற்பதாண்டுகளாக இரவும் பகலும் தூங்காமல் இருக்கிறார் மனிதர்.

இதில் வியப்பளிப்பது என்னவென்றால், இவர் பிற மனிதர்களைப் போலவே உழைக்கிறார். மலைக் கிராமத்தில் வாழும் தாய்நாக், நாள்தோறும் 50 கிலோ எடையுள்ள பொருட்களை மலைப் பாதைகளில் தூக்கிச் செல்கிறார்.

தூக்கமில்லாமல் இருப்பது உங்களைப் பாதிக்கவில்லையா? என்று கேட்டால், “பாதிக்கிறது. தண்ணீர் கிடைக்காத தாவரம் போல உணர்கிறேன்” என்று சொல்கிறார் இந்த 70 வயது தாத்தா!


# ‘குண்டு’களின் கிராமம்

அமெரிக்காவின் “ஓஹியோ” மாகாணத்தில் அண்டோவர் என்பது ஒரு சிறிய கிராமம். இந்த கிராமம் முழுவதும் குண்டு மனிதர்களின் நடமாட்டம் எப்போதும் இருக்கும்.

இதற்குக் காரணம் கரின் பிரெஞ்ச் என்பவரின் தலைமையில் இங்கு ஒரு மருத்துவமனை உள்ளது. இங்கு குண்டாக இருப்பவர்களை மெலிய வைப்பதற்கான தொடர் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சிகிச்சைக்காக வருபவர்களால்தான் இந்தக் கிராமம் குண்டு மனிதர்கள் நிரம்பிய ஊராகக் காட்சியளிக்கிறதாம்.

பல மருத்துவமனைகளுக்கும் சென்று உடல் மெலியாத குண்டர்கள் இங்கு வந்து சிகிச்சை பெற்றால் மெலிந்து விடுகிறார்களாம்.

300 கிலோ எடை உள்ளவர்கள் 150 கிலோவாகவும் 177 கிலோக்காரர்கள் 90 கிலோ மனிதர்களாகவும் சிகிச்சையின் மூலம் மாறி விடுகிறார்களாம். அவ்வளவு உயர்ந்த சிகிச்சை இந்த மருத்துவ மனையில்.



# சின்ன சின்ன...

❖ ஜிம் கெலியை ஞாபகமிருக்கிறதா? 1973இல் வெளியான புரூஸ்லீயின் “என்டர் தி ட்ராகன்” (Enter The Dragon) படத்தில் அவரது நண்பர்களாக வரும் மூவரில் ஒருவர். அமெரிக்காவைச் சேர்ந்த கறுப்பரான இவர் ஆபிரிக்கர் போன்று அடர்த்தியான சுருள் முடி கொண்டவர். அதுவே அவரது தனித்த அடையாளமாகவும் விளங்கியது. என்டர் தி ட்ராகன் அவருக்கு இரண்டாவது படம். கராத்தே கலையில் தேர்ந்தவரான மறக்கமுடியாத நடிகரான ஜிம் கெலி கடந்த வாரம் கான்ஸர் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் கலிபோர்னியாவிலுள்ள அவரது வீட்டில் மரணமடைந்தார். அவருக்கு வயது 67.

❖ அறிமுகமாகிய சில ஆண்டுகளிலேயே ஏறக்குறைய 3000 பாடல்களுக்கு மேல் பாடியிருப்பவர் பின்னணிப் பாடகர் கார்த்திக். இவர் முதன்முதலாக வசந்தபாலனின் “அரவான்” படத்திற்கு இசையமைப்பாளராக உயர்ந்தார். அடுத்து கௌதம் மேனன் தயாரித்து பிரேம் சாய் இயக்கத்தில் உருவாகும் “தமிழ்செல்வனும் தனியார் அஞ்சலும்” படத்திற்கு இசையமைக்கிறார். இந்தப் படம் தெலுங்கிலும் “கூரியர்-போய் கல்யாண்” என்ற பெயரில் வரவிருக்கிறது. அதனால் இரட்டிப்பு மகிழ்ச்சியில் இருக்கிறார் கார்த்திக். இவரைப் பற்றிய இன்னொரு ரகசியம், தமிழ், தெலுங்கு, மலையாளம், பெங்காலி மொழிகளில் பாடினாலும், பாடல்களை ஹிந்தியில் எழுதிவைத்துக் கொண்டுதான் பாடுகிறாராம்! இது எப்படி இருக்கு!!

❖ பொலிவுட்டின் “பிக்-பொஸ் இமேஜி”ற்குச் சொந்தக்காரரான ஷாருக்கானின் மகன் பெயர் ஆர்யன். படிப்பது - லண்டன், செவன் ஓக்ஸ் பள்ளியில். கமெரா - மீடியாவின் வெளிச்சம் என்றாலே இவருக்கு அலர்ஜியாம். தப்பித்து ஓடுவதிலேயே குறியாக இருப்பாராம்!

❖ அரசியல்வாதிகளை விக்கி லீக்ஸ் இணையதளம் மூலம் ஒரு கலக்கு கலக்கிய ஜூலியன் அசாஞ்சே கவிஞராகவும் வடிவம் எடுத்துள்ளார்.




மத்திய அமெரிக்காவிலுள்ள போர்ட்டோ ரிகோ நாட்டின் “காலே 13” என்ற பிரபல இசைக்குழுவுக்கு பாடலாசிரியராக பொறுப்பேற்றுள்ளார். மக்களின் பேச்சுரிமையை வலியுறுத்தும் பாடல்களை அவர் அளிக்க இருப்பதாக செய்தி.

❖ தனது பெரிய விழிகளை விரித்து, திரையில் “சின்ன சின்ன ஆசை” பாடலுக்கு ஆச்சரியப்பட்ட “ரோஜா” நாயகி மதுபாலா மீண்டும் நடிக்க வருகிறார்! “இரண்டு குழந்தைகளுக்கு தாயாக சந்தோஷமாக இருக்கிறேன். நிறைய வாய்ப்புகள் வந்தபோதும் எனக்குப் பொருத்தமில்லாத பாத்திரங்களாக அவை இருந்ததால் நடிப்பதற்கு மறுத்துவந்தேன். எனக்கு இப்போது 40 வயதாகிறது. அதற்கேற்ற பக்குவத்துடனான பாத்திரங்களில் நடிப்பது என்று முடிவு செய்திருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு பாத்திரம் லக்ஷ்மி ராமகிருஷ்ணன் இயக்கும் அடுத்த படத்தில் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதனால் மகிழ்ச்சியோடு மீண்டும் நடிக்கவந்திருக்கிறேன்” என்கிறார்.

❖ ஹொலிவுட்டின் பிரபல நடிகர் ஜொனி டெப்பின் மூதாதையரில் ஒருவரான எலிஸபெத் கெ என்பவர்தான் ஆங்கிலேயர்கள் தங்களை அடிமைகளாக்குவதை எதிர்த்து முதன்முதலாக 1656இல் வியன்னாவில் வழக்கு தொடுத்தவராம்! ஜொனி டெப் - எலிஸபெத்துக்கு எட்டாவது தலைமுறையைச் சேர்ந்த கொள்ளுப் பேரனாம்!

❖ “எனக்கு பிரம்மாண்டமாக படம் எடுப்பதிலோ எடுத்த படத்தை அறிமுகப்படுத்துகிறோம் என்று படத் தயாரிப்பில் பாதியைச் செலவு செய்வதிலோ உடன்பாடில்லை” என்று சொல்லியிருக்கிறார் கிரண் ராவ், அமீர்கானின் மனைவி. இவரது “ஷிப் ஒ:ப் தீஸிஸ்” படம் விரைவில் வெளிவரவிருக்கிறது. எதார்த்தமான இந்தப் படத்தை கமர்ஷியல் சினிமாவை தயாரிக்கும் தனது கணவரின் அமீர் கான் புரடக்ஷன் ஹவுஸ் சார்பாக தயாரிக்க தான் விரும்பவில்லை என்றும் கூறியிருக்கிறார் கிரண்.

# நூற்றாண்டுகளின் நிகழ்ச்சி!

திருவையாறே வந்துவிட்டது. ஊருக்குள் புகும்பொழுதே இடதுபுறமாகத் திரும்பி சிறிது நடந்தால் தியாகையரின் சமாதி. காவிரி ஓரமாக, மந்தமாகச் செல்லும் நீரின் சலசலப்பையும் ஆற்று வெளியின் அமைதியையும் புள்ளரவங்களையும் கேட்டுக் கொண்டு தியாகையரின் ஆத்மா மௌனமாக நாதக் கடலில் ஆழ்ந்து கிடக்கிறது. தென்னிந்திய இசையின் சிகரம் என்பதைத்தவிர வேறு ஒன்றும் தியாகையரைப் பற்றிச் சொல்லத் தோன்றவில்லை. தென்னிந்திய இசையும் தியாகையரின் கையைப் பற்றிக் கொண்டு ஒரு தாவு தாவிற்று. சங்கீதத்தில் உருக்கத்தையும் தவத்தையும் சங்கதி முறையில் இணைத்தார் அவர். அதைவிட, யாருக்கும் இன்ன வடிவம் என்று தெரியாமல் வெறும் ஸ்வர இணக்கணத்தோடு ஏட்டில் கிடந்த அபூர்வ ராகங்களை எடுத்து, தம் கற்பனையாலும் தியானத்தாலும் கலை நுட்பத்தாலும் அவற்றுக்கு ஒரு வடிவம் கொடுத்து கீர்த்தனைகளில் உருவம் தந்து நிலைப்படுத்திவிட்டார். ஹிந்தோள வஸந்தம், ரஞ்சனி, ஜலந்தஸ்ரீ, ஜயந்தாஸனா, பின்னஷட்ஜம், தேனுக, ஷட்வித மார்க்கினி, காபி நாராயணி, கல்யாண வஸந்தம், வஸந்த பைரவி, மஞ்சரி, உதயசந்திரிகா - இன்னும் எத்தனையோ அபூர்வராகங்கள் அவருடைய கீர்த்தனைகளில் வடிவம் பெற்றன. அவருடைய கீர்த்தனைகள் வெறும் தெய்வ முகமன்களல்ல. அவ்வப்போது தோன்றும் உணர்ச்சிகளின் கலை வடிவங்கள்.

டெல்டாக் காவிரியையும் அதன் கிளைகளையும் போல தியாகையரின் பாடல்கள் வீடு வீடாகப் புகுந்திருக்கின்றன. இலட்சக்கணக்கான மக்களுக்கு ரசானுபவம். நூற்றுக்கணக்கான சங்கீத வித்வான்களுக்குப் பிழைப்பு. தியாகையரின் தூய்மை, பக்தி, நியாயமான கோபங்கள், அலுப்பு, ஏக்கம், ஏராளமான அளவுக்கு கீர்த்தனைகள் இயற்றியது, அவருடைய சுதந்திரப் போக்கு, வேண்டுமென்றே வரித்த எளிமை, ஏழ்மை - ஒவ்வொன்றையும் ஆழ்ந்து சிந்திக்கும்போது நமக்குத் தோன்றுவது - பல நூற்றாண்டுகளுக்கிடையே ஏற்படும் நிகழ்ச்சி அவர்.

சாப்பிட்டுவந்து மீண்டும் படித்துறையில் கடைசிப்படியில் உட்காருகிறோம். காவிரி நீர் கணுக்கால்வரை நனைக்கிறது. எதிரே இரவு. நட்சத்திரங்கள். வசியம் பேசும் நீர்சலசலப்பு, சுழிப்பு. அக்கரையிலிருந்து வரும் ஓசைகள், நக்ஷத்திரங்கள், பஞ்சு மேகம் எல்லாம் காவிரியின் அழகைக் காணக் கூடியிருப்பது போலிருக்கிறது. “க்ளக், க்ளக்....” என்று நடு நடுவே நீரின் ஓசை. காவிரி எதை நினைத்துச் சிரித்துக் கொண்டே போகிறாள்? யார் செவியில் எந்த வசியத்தைச் சொல்லப் போகிறாள்?

இந்த இடத்தைவிட்டுக் கோடிப் புணம் கொடுத்தாலும் தியாகையர் நகர்ந்திருக்கமாட்டார். அவர் நகரவில்லை. அரச தர்பார், அவைத் தலைமை, அந்தக்கால அகாடமிகள், பட்டங்கள், பணங்கள்... எதையும் நாடவில்லை அவர். வலிய வந்து இழுத்தவைகளையும் பின்தொடர்ந்து போகவில்லை. காவிரி தன் அருகிலேயே அவரை வைத்திருந்தாள்.

(‘நடந்தாய் வாழி காவேரி’ நூலில் சிட்டி, தி.ஜானகிராமன்)




# யா/கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கற்றலுக்கு உதவும் கல்விச் சுற்றுலா

வாரம் ஒரு பாடசாலை


## மீளும் நினைவுகளுடனான அனுபவ பகிர்வு



சுற்றுலாவின் ஆரம்ப நிகழ்வு....



ஓமந்தை வண்ணாங்குளம் பொற்கோவில்...



அனுராதபுரம் ஸ்ரீமகாபோதிமரம்



அனுராதபுரம் ஸ்ரீமகாபோதி



அனுராதபுரம் தூபராம வீகாரை

நீண்டு நிலைத்து நிற்கக் கூடிய நடத்தை மாற்றமே கற்றல் என்பதாகும். எனினும் கற்றலின் மேம்பாடு என்பது மூடிய வகுப்பறைக்குள் மட்டுமோ அல்லது நூல்களினூடாகவோ அல்லது செயலமர்வுகள் ஊடாகவோ முழுமையடைவதில்லை. அனுபவங்களும் பயிற்சிகளும், வெளிகள தரிசிப்புக்களும், மேற்குறித்த செயற்பாடுகளுடன் நேர்மனப்பாங்குடன் இணைகின்ற போதே கற்றல் மேம்பாடு முழுமையடைகின்றது. அந்தவகையில் எம்மில் பலர் வெளியக தரிசிப்பு மற்றும் புலக் காட்சியினூடாக அனுபவத் தேடல்களை பெற முடியாமல் இருக்கின்ற நிலை என்பது துர்ப்பாக்கிய விடயமானதொன்றாகும்.


இத்தேடலுக்கு மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் விதிவிலக்கானவர்கள் அல்ல இலங்கையில் இலவசக் கல்வியை நடைமுறைப்படுத்தும் அரசாங்கமானது தனது கலைத் திட்டத்தில் கற்றல் செயற்பாடு வெற்றியளிக்க கற்றலுடன் கூடிய இணைப் பாடவிதான செயற்பாட்டிற்கு பிரதான பங்கு வழங்கியுள்ளது.

அந்தவகையில் தென்மராட்சி கல்வி வலயத்தின் தரம் II வகையைச் சார்ந்த பாடசாலைகளுள் ஒன்றாகிய கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இவ்வருடத்தின் இணைப் பாடவிதானத்தின் ஒரு அங்கமாகிய வெற்றிகரமான கல்விச் சுற்றுலா ஒன்றின் அனுபவப் பகிர்வை பகிர்ந்து கொள்வதே நோக்கமாகின்றது.

மேற்குறித்த திட்டமிடல்கள் முழுமையடைய உரிய பயணம் 10.06.2013 அன்று காலை 6 மணிக்கு பிரதேசத்தின் பிரசித்தி பெற்ற கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இருந்து பயணம் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து உங்களை பயணப் பாதைகளுள் அழைத்து செல்கின்றோம்.

**போதி மாதவனின் புகழ் பரப்பும் ஸ்ரீமகாபோதியும் அதன் வழிபாடும்**

கலிங்கப் போரின் பின்னர் மனமாற்றத்தினூடாக பௌத்த மதம் மாறிய அசோக மன்னன் இலங்கையிலும் பௌத்த மதத்தை பரப்பும் நோக்கில் வெள்ளரசு மரக்கிளையுடன் தனது மகளான சங்கமித்தையை அனுப்பி ஜம்புகோளப்பட்டினத்தினூடாக அனு



ராதபுரத்தை அடைந்து வெள்ளரசு மரக கிளையும் நாட்டிய பௌத்த வழிபாட்டுத தலமாகிய ஸ்ரீமகாபோதியையும் அடைகின்றனர். இலங்கை பௌத்த மதம் வருகை தந்ததையிட்டு ஸ்ரீமகாபோதி எனப்படும் புனித வெள்ளரசு மரக்கிளையின் வருகை இடம்பெற்றது.

இந்தியாவின் புத்தகாயாவில் புத்தர் அமர்ந்து இருந்து பரிநிர்வானமடைந்ததாக கருதும் அரசமரத்தின் கிளையினை பதியம் செய்து எடுத்துக் கொண்ட மகிந்ததேரரின் சகோதரியான சங்கமித்தை ஜம்புகோளப்பட்டினத்தினூடாக இலங்கையை வந்தடைந்தார். அக்கிளையானது பெரும் வழிபாட்டுடன் மகா மேக வனத் தோட்டத்தில் நாட்டப்பட்டது.

இப்போதி மரமானது தற்போது பெரு விருட்சமாக தங்க முலாம் பூசப்பட்டு தாங்கு தடிகளுடன் காணப்படுகின்றது. பௌத்தர்களுக்கு மிக புனிதமான இப்போதி மரமானது உந்துவ பௌர்ணமி தினத்தன்று நாட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. அத்தகைய சிறப்பு பெற்ற இடத்தை பார்வையிட்ட பயணக் குழுவினர் அதனருகே துட்டகை முனுவால் கட்டப்பட்ட ஆயிரம் கால் மண்டபத்தையும் ருவான் வெலிசாய தாதுகோபுரத்தின் பிரமாண்டத்தையும் கண்டு வியந்தனர்.

கி.மு 137 இல் இத்தூபி கட்டி முடிக்கப்பட்டது. அதற்கிடையில் துட்டகைமுனு மரணமடைய அவனது சகோதரனான சதாதீசனால் இப்பணி நிறைவேற்றப்பட்டது. அதனை ஆவலுடன் பார்வையிட்ட மாணவர்கள் தொடர்ந்து பண்டைய கால கட்டட மற்றும் சிற்பக் கலையின் சிறப்பை வெளிப்படுத்தி நிற்கும் இசுரு முனிய காதலர் சிற்பக் கட்டட அமைப்புக்களையும் புராதனகால மன்னர்கள் பயன்படுத்திய ஆசனங்கள், படுக்கைகள், ஆடைகள், சமையல் பொருட்கள் என்பவற்றை பார்வையிட்டு அபய மன்னனால் கட்டப்பட்ட விசாலமான சமுத்திரபிரதேசமான அபயவாவியை கண்டு களித்த மகிழ்வில் பயணம் மிகிந்தலை நோக்கி நீள்கின்றது.



**மகிந்ததேரரின் மகிழ்வான வரவால் மிளிர்ந்து நிற்கும் மிகிந்தலை**

புத்தர் மறைந்து 237 ஆண்டுகளிற்கு பின் பொசன் பௌர்ணமி தினத்தில் மிகிந்தலை என்ற மலை உச்சியில் உள்ள காட்டுப் பகு

திரு. தி. அபராஜிதன்
ஆசிரியர்
யா/கச்சாய் அ.த.க.பாடசாலை

திக்கு அக்கால அனுராதபுர மன்னன் தேவநம்பிய தீசன் வேட்டையாடச் சென்றபோது மலையின் உச்சியில் நின்று மகிந்ததேரரை காணுகின்றான். அந்நேரம் பயபக்தியுடன் அம்பையும் வில்லையும் ஒரு புறத்தே போட்டுவிட்டு மகிந்ததேரரினை வணங்கினான். அச்சந்தர்ப்பத்தில் மகிந்ததேரரால் போதிக்கப்பட்ட தர்ம போதனைகளை ஏற்று பௌத்த மதத்தை தழுவிய இலங்கையின் முதலாவது பௌத்த மன்னன் தேவநம்பிய தீசன் என்ற வரலாற்றை சித்தரிக்கும் இடமாக இது விளங்குகின்றது.

**காசியப்பனின் கற்பனைத் திறன் வெளிப்பாடு**

மறுநாட் காலை (12.06.2013) மீண்டும் தேவார தியான பயிற்சியுடன் மூன்றாம் நாள் பயணம் பொலனறுவ நோக்கி நகர ஆரம்பிக்கின்றது. பொலநறுவையினூடாக சிந்தனைக்கு விருந்தாகிய சிகிரியா நோக்கி செல்கின்றது. அடர்ந்த காட்டினூடாக சிகிரியா மலைச் சாரலை சென்றடைந்து சிகிரியா மலையேற்றம் ஆரம்பமாகின. காசியப்பன் என்ற மன்னன் தனது சகோதரரான மொக்கொல்லானன் என்பவனால் தனக்கு ஏற்படக் கூடிய அச்சறுத்தல் கருதி பாதுகாப்பிற்காக சிகிரிய மலைக் குன்றில் கி.பி 477 இற்குப் 495 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தனது இராசதானியை நிறுவயிருந்தான். மிகவும் அற்புதமான கலைத்துவ படைப்புடன் நகராக வடிவமைக்கப்பட்டிருந்த இக்குன்றை சூழ பாதுகாப்பு அகழியும் பூந்தோட்டமும் குகையின் உச்சியில் தேவ கன்னிகளின் ஓவியங்களும் அழகாக வரையப்பட்டுள்ளமை உலகின் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் சுவர்க்க புரியாக திகழ்கின்றது. மேலும் அரச மாளிகையின் எஞ்சிய அம்சங்கள் மலை உச்சியில் காணப்படுகின்றது.

இவ் ஓவியங்களின் தன்மை பல நூற்றாண்டுகளாயினும் கெடுதி இல்லாமல் இருப்பது தொடர்பாக பல ஆய்வாளர்களின் ஆய்வுக்கான சிந்தனைத் தேடலாக உள்ளது. இவ் ஓவியங்கள் புராதனகால மரங்களின் வேர்களின் சாயங்களாக இருக்கலாம் என்பதும் ஒரு சாராரின் கருத்தாகும். சிந்தனைக்கும் உடல் பயிற்சிக்குப் முக்கிய இடமாக விளங்கிய சிகிரிய மலை ஏறலைத் தொடர்ந்து பயணக் குழுவினர் பயணம் இலங்கையின் ஆதி வாசிகளின் வாழ்விட தரிசிப்பிற்காக மகியங்கனை நோக்கிச் செல்கின்றது.

(அடுத்தவாரம் தொடரும்...)

# கப்பற்துறையில் வேலைவாய்ப்பு மாணவர்களுக்கு இறுதி சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

கப்பற்துறையில் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் வகையில் யாழ். மருதனார்மடம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள C.I.N.E. C.L.Jaffna Campus)என்ற கல்வி நிறுவனம் 2ஆம் தொகுதி மாணவர்களிற்கான கற்கை நெறிகளை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக இந்நிறுவனத்தின் இணைப்பாளர் என். சிவரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக தகவல் தருகையில்:

கப்பற்றுறையில் தொழில் வாய்ப்பினை பெற நுழைவாயிலாக கருதப்படும் "மாலுமிகள் சான்றிதழ்"இற்கான கற்கைநெறிக்கான கல்வித்தகைமை க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றியிருந்தால் மட்டும் போதுமானதே என்ற அரசினால் வழங்கப்பட்ட சலுகை வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்களிற்கு 2013 ஆண்டுடன் முடிவடைகிறது.

இந் நிறுவனத்தால் கடந்த மார்ச் மாதம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, மன்னார் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 46 மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டு வெற்றிகரமாக செயன்முறைப் பயிற்சிகளுடனான நெறிகளை பூர்த்தி செய்து பரீட்சையிலும் தோற்றி கப்பலில் தற்பாதுகாப்பு போன்ற குறுகியகால கற்கைநெறிகளை கற்பதற்காக கொழும்பிலுள்ள தாய் கல்வி நிறுவனத்திற்கு செல்லவுள்ளார்கள்.

க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றியுள்ள மாணவர்கள் இரண்டாவது கற்கை நெறியை தவறவிடவேண்டாம். மேலும் விபரங்களிற்கு C.I.N.E.C T.P. 021 492 5925 or VaiswA 0779786096 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் கல்வித்தகைமை இல்லை என்ற கவலையை மறந்து விடுங்கள். இக் கற்கை நெறிகளை கற்பதன் மூலமாக கப்பலில் தொழில் வாய்ப்பினை பெற்றுத் தகுதியான சேவைக் காலங்களின் பின்பு மேலும் தேவையான கற்கை நெறிகளை கற்றுத்தகுதியான பரீட்சைகளில் சித்தியெய்தி பதவி உயர்வுபெற்று கவர்ச்சிகரமான சம்பளத்தில் தொழில் புரியலாம். மாதாந்த சம்பளததுடன் உலகை சுற்றிப்பார்த்தல் வெளிநாட்டு நாணயத்தில் மாதாந்தம் பதவிகளுக்கேற்ப சம்பளம் (U.S$ 500 -US.12000) அளவினதாக உள்ளது.

இத்தொழில் வாய்ப்புகள் பற்றியும் கற்கை நெறிகள் பற்றியும் இக்கல்வி நிறுவனமும் வல்வை மாலுமிகள் நலன் புரிச்சங்கமும் இணைந்து ஒரு கருத்தரங்கினை நாளை சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் வல்வெட்டித்துறை மத்திய நவீன சந்தை கட்டடத்தின் மேல்மாடியில் அமைந்துள்ள நகரசபை மண்டபத்தில் நடாத்த திட்டமிட்டுள்ளது. இதில் ஆர்வமுள்ள சகலரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் இது சம்பந்தமாக இலவச பாடவகுப்புக்கள் (ஆங்கிலம் உட்பட) எம்மால் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மகோற்சவம்

(வரணி)

வரணி கரவை கரம்பான்திருவருள் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். உற்சவகால பிரதம குருவான சிவஸ்ரீ இ.சண்முகபாலசுப்பிரமணிய குருக்கள் கலந்துகொண்டு உற்சவத்தை நடாத்தவுள்ளார். (150)



காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி அம்பாள் ஆலய பஞ்ச கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது...

## பதிவிறக்கப் பெட்டகம்

அழைப்பு மணி ஒலித்தது.
கதவைத் திறந்து, "வாருங்கள்" என்றார்.
வந்தவர் சோபாவில் அமர்ந்தார்.
அவருடன் உள்ளே நுழைந்த நாய் அப்பழ இப்பழப் பார்த்துவிட்டு, கடைசியில் நாற்காலியில் தாவி அமர்ந்து கொண்டது.
வந்தவர் பேசி முழத்துவிட்டு விடைபெற்று வாசல் வரை சென்றுவிட்டார்.
நாய் நாற்காலியிலேயே படுத்துக் கண்களை மூழக் கொண்டிருந்தது.
"நாயை விட்டு விட்டுப் போகிறீர்களே?" என்று கேட்டார்.
அதற்கு வந்தவர் சொன்னார்: "அது என் நாயில்லை. உங்கள் நாய் என்றல்லவா? நினைத்தேன்"

*** *** *** ***

சொர்க்கத்தில், நன்மைகள் நிறைய செய்த ஒரு ஏழை வர தேவதைகள் சாதாரணமாக அழைத்துச் சென்றனர்.
மறுநாள் ஒரு செல்வந்தன் வந்தான், தாரை–தப்பட்டையுடன், பூக்கள் தூவி சீரும் சிறப்புமாக வரவேற்கப்பட்டபின் தேவதைகள வரிசையாக நின்று பாழனர் போற்றி.
இதைப் பார்த்த ஏழை, 'சொர்க்கத்திலும் ஏற்றத் தாழ்வு உண்டு என்று அறியாமல் போனேனே..!' என வருந்தினான்.
அதைக் கேட்ட தேவதை ஒன்று, 'இங்கு ஏற்றத் தாழ்வு கிடையாது. உன்னைப் போல ஏழைகள் சொர்க்கத்திற்கு அழக்கழ வருவார்கள். அவனைப் போன்ற செல்வர்கள் எப்போதாவது தான் வருவார்கள். அதனால்தான் அத்தனை வரவேற்பு' என்றது.

*** *** *** ***

அவர் உணவகம் ஒன்றின் முன் காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்று சாப்பிட்டுத் திரும்பினார். காரைக் காணவில்லை.
உடனே, "என் காரை எடுத்தவர் யாராக இருந்தாலும் நான் மீண்டும் உள்ளே சென்று வெளியே வருவதற்குள் அதே இடத்தில் வைத்துவிடுங்கள். தவறினால் கண்டியில் என் பைக் தொலைந்தபோது, என்ன செய்தேனோ.. அது இங்கு நடக்கும்" என்றார்.
அவர் உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்தபோது, கார் அதை நிறுத்தி வைத்திருந்த இடத்தில் இருந்தது. ஆவலாக ஒருவர் கேட்டார்:
"கண்டியில் பைக் தொலைந்தபோது என்ன செய்தீங்க?"
"வேறென்ன செய்றது? நடந்து வீடு போய்ச் சேர்ந்தேன்"

*** *** *** ***

செஸ்டர்டன் என்ற எழுத்தாளர் சற்று பருமனான உடலமைப்பு உடையவர். தன் உடல் அமைப்பில் அவரே பெருமையும் பூரிப்பும் கொண்டவர். இவர் ஒரு முறை பெர்னாட்ஷாவிடம் பேசிக் கொண்டிருக்கும் போது, "நீங்கள் நம் நாட்டிற்கு இழிவைத் தேழக் கொடுக்கிறீர்கள். உங்களைப் பார்க்கும் வெளிநாட்டவர்கள் நம் நாட்டைப் பற்றித் தவறாக மதிப்பிடுவார்கள்." என்று கூறினார். பெர்னாட்ஷா, "ஏன்?" என்று கேட்டார்.
செஸ்டர்டன், "ஒல்லியான உங்கள் உடலைப் பார்ப்பவர்கள், நம நாடு பஞ்சமும் பட்டினியும் கொண்ட நாடு என்றல்லவா சொலவார்கள்" என்றார்.
பெர்னாட்ஷாவும் சிரித்துக் கொண்டே, "உண்மைதான். ஆனால் என்னுடைய மெலிவிற்குக் காரணம் உங்களைப் பார்த்ததுமே தெரிந்துவிடுமே. என்னுடைய சாப்பாட்டையும் நீங்களே சாப்பிட்டுக் கொழுத்திருப்பது" என்றார்.

*** *** *** ***

வானத்தில் மூன்று கிளிகள் பறந்து கொண்டிருந்தன. முதலில சென்ற கிளி, தனக்குப் பின்னால் இரண்டு கிளிகள் வருவதாகச் சொன்னது. இரண்டாவதாகச் சென்ற கிளியும் தனக்குப் பின்னால் இரண்டு கிளிகள் வருவதாகச் சொன்னது. மூன்றாவதாகப் பறந்து சென்ற கிளியும் தனக்குப் பின்னால் இரண்டு கிளிகள் வருவதாகச் சொன்னது.
மொத்தமே மூன்று கிளிகள். அப்பழயிருக்க கிளிகள் ஏன் அப்பழப் பேசின?
கிளிகள் எப்போதும் சொன்னதையே சொல்லும்.

*** *** *** ***

அவருடன் பேசும் எவரும் முதலிலேயே தோல்வியை ஒப்புக் கொண்டுவிட்டால் அதற்குப் பிற்பாடு அவருடன் பேசுவது எளிதாக இருக்கும்.

*** *** *** ***

நீ யாரையாவது ஏமாற்றிவிட்டால் அவர்கள் ஏமாந்து விட்டதாக அர்த்தம் இல்லை. உன்னை அளவுக்கு அதிகமாக நம்பியிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

## வெள்ளி நற்சிந்தனை...

# அன்புக்கு பணிந்த ஆண்டவன்

கடவுளை நேரில் கண்டு தரிசிக்க வழி இல்லாத போது ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களில், அவனுடைய உருவத்தைக் கண்டு திருப்தி அடைகின்றோம். சந்தோஷப்படுகிறோம்.

விக்கிரக உருவத்தை வழிபட்டு, நம்முடைய மனதிலும் அப்பழயே பிரதிஷ்டைசெய்து கொண்டுவருகிறோம். பிறகு அதே உணர்வுடன் தியானத்தில் ஈடுபடும்போது, மெய்யான இறைவனையே நம்மால் நெருங்கி விட முழகிறது.

இறைவன் ஐம்புல நுகர்ச்சியையும் நமக்குக் கொடுத்திருப்பது எதற்காக? அவனை உணர்ந்து போற்றுவதற்காகத் தானே!

"இறைவன் கொடுத்த கரங்கள் அவனது திருவழகளில் சில புஸ்பங்களை வைத்துப்பூஜிக்கப் பயன்படாமல் போகுமானால், அந்தக் கரங்களை துண்டு துண்டாக வெட்டிக் காக்கைக்கும், கழுகிற்கும் வீசி எறிந்தால் கூடத்தவறில்லை" என்று ஒரு அழயார் சொன்னார்.

உருவ வழிபாட்டிற்காக உருவான ஆலயங்களைப் புனிதமாக வைத்துப் போற்றிப்பாதுகாக்க வேண்டும். வீண் அரட்டை அழக்கும் வம்புமடமாக அதை ஆக்கிவிடக் கூடாது.

கிருஷ்ண பரமாத்மாவின் புன்சிரிப்பில் அஸ்தினாபுர மக்கள் மயங்கிப் போனார்கள். அந்த மோகனப் புன்னகை ஏற்பத்திய இன்பத்தில் மெய் சிலிர்ததார்கள். கிருஷ்ண பகவானைத் தரிசிக்கப் போட்டி போட்டுக் கொண்டு சென்றார்கள். தாங்கள் தரிசித்த மாயக்கண்ணனின் உருவத்தை அப்பழயே மனதில் உள்வாங்கிக் கொண்டார்கள். கிருஷ்ண பரமாத்மா தங்குவதற்கு துரியோதனன் பெரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தும் கிருஷ்ணபகவான் விதுரன் வீட்டில் போய் தங்குகிறார். அதிகாரத்தையும், ஆம்பரத்தையும் கிருஷ்ணனுக்கு உணர்த்த, துரியோதனன் அழைப்பு விடுத்தான். ஆனால் விதுரனின் அழைப்பு, எளிமையான உள்ளத்தில் இருந்து வந்ததால், பகவான் அதை ஏற்றுக் கொண்டு, அவனுக்கு கௌரவத்தைக் கொடுத்தார்.

எளிமையான மாசற்றநெஞ்சமே இறைவன் குழயிருக்கும் ஆலயம் என்பதை உணர்வோமாக!

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# குறைகள் தீர்க்கும் சந்திப்புக்கள்



## யாழ். மாநகர சபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பகுதியின் கீழான தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது மாநகர சபையின் சுகாதாரப் பகுதியின் செயற்திட்ட நடவடிக்கைகளை மாநகர சபை ஆணையாளர் நேரடியாக கையாள்வார் எனவும் அதற்கு சகல தொழிற்சங்க பிரதிநிதிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகள் தொடர்பில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் பிற்பகல் மூன்று மணிக்கு பின்னர் ஆணையாளரை சந்தித்து கலந்துரையாட வேண்டுமென்றும் குறித்த திட்டம் மாற்று ஏற்பாடு செய்யும் வரையில் இன்று முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இதன்போது யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர ஆணையாளர் பிரணவநாதன், ஈ.பி.டி.பி. யின் யாழ்.நகர இணைப்பாளரும், மாநகர சபை உறுப்பினருமான றீகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## முகாமைத்துவ, கணக்கியல், கடற்றொழிலியல் டிப்ளோமாதாரிகள் சந்திப்பு

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மற்றும் உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரிகள் தமது நியமனங்கள் தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், இவ்விடயம் தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் அமைச்சர் அவர்கள் தொலைபேசியில் கலந்துரையாடி நிலைமைகள் தொடர்பாக அவருக்கு எடுத்து விளக்கினார்.

பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்நியமனத்திற்காக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் இணைந்து கூட்டு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டு அதுதொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.



உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2012 ஆம் ஆண்டு வரை கற்கை நெறிகளை பூர்த்தி செய்த இவர்களுக்கு இதுவரையில் நியமனங்கள் வழங்கப்படாத நிலையிலேயே இப்பட்டதாரிகள் அமைச்சர் அவர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதனிடையே கடற்றொழிலியல் டிப்ளோமாதாரிகளும் தமது நியமனங்கள் தொடர்பில் அமைச்சர் அவர்களை சந்தித்துக் கலந்துரையாடினர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கத் தீர்மானம்

வட மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிலருக்கு 10,000 ரூபா இழப்பீடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அலரி மாளிகையில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் இந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் G.S.விதானகே தெரிவித்தார். இழப்பீடு பெற்றுக்கொள்ளும் குழுவினரில் விதவைகளும் அடங்குவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட சிலருக்கு இழபபீடு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்றுமுன்தினம் பராக்கிரமபாகு மன்னனின் உருவச்சிலையொன்று திறந்து வைக்கப்பட்டது.

# மானிப்பாய் - இணுவில் வீதிப் புனரமைப்புப் பணி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இருந்து இணுவில் நோக்கிச் செல்லும் வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. பலாலி வீதியையும் காரைநகர் வீதியை மானிப்பாயில் இணைக்கும் இந்த வீதியில் சிறியரக வாகனங்கள் மோட்டார் சைக்கிள்கள் அதிகளவில் பயணம் மேற்கொள்கின்றன.

நீண்டகாலமாக மிகவும் ஒடுங்கியதும் புனரமைப்பு செய்யப்படாமலும் இருந்த இந்த வீதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வந்தன. தற்போது வீதிப் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டு அகல்மாக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. இவ்வீதிப் புனரமைப்பு நிறைவு பெற்றதும் மக்கள் பெரிதும் பயன் பெறுவர்.

# இன சமூகங்களின் அடிப்படையில் பிரதேச செயலகங்கள் நிறுவப்படமாட்டாது

(கொழும்பு)

இன சமூகங்களின் அடிப்படையில் பிரதேச செயலகங்கள் நிறுவப்படமாட்டாது. ஒவ்வொரு இன சமூகத்திற்கும் தனித் தனியான பிரதேச செயலக அலகுகளை வழங்குவது ஆபத்துக்களை ஏற்படுத்தும் என பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இது தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கும். அரசாங்க அலுவலகங்கள் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. அரச அலுவலகங்கள் சகல இன மக்களின் வரிப் பணத்திலேயே இயங்குகின்றது. எனவே இன சமூக அடிப்படையில் பிரதேச செயலகங்களை அமைத்துக்கொடுக்க முடியாது.

இனங்களுக்கு இடையில் பிளவு ஏற்படுவதனை விரும்பவில்லை, இன சமூகங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கல்முனையில் நிலவிவரும் பிரதேச செலயகங்கள் தொடர்பிலான பிரச்சினைக்கு தீர்வாக தரமான ஒரு பிரதேச செயலகத்தை நிறுவவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். கல்முனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# முதியவர்களுக்கு கொடுப்பனவு


70 வயதிற்கும் மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் சமூக பாதுகாப்பு கொடுப்பனவை பெறுவதற்காக புதன்கிழமைகளில் தொடர்புகொள்ளுமாறு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் முதியோர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் திருமதி பா. தனுசியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.


அரசாங்க முதியோர் நலன் புரி கொள்கையின் கீழ், வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் 70 வயதை தாண்டியவர்கள் மாதந்தம் 1000 ரூபா பெறுமதியான கொடுப்பனவை பெறுவதற்காக புதன்கிழமைகளில் தொடர்புகொண்டு தகவல்களை வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் - காரைநகர் வீதியில் ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் சந்திப் பகுதியில் வீதி குறுகலாகக் காணப்படுவதனால் அன்றாடம் மக்கள் போக்குவரத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதுடன், பதற்றத்துடனே அவ்வீதியில் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர். (21)

4. கூட்டுக $\frac{2}{10} + \frac{3}{5} = \square$

5.  இவ்வுருவிலுள்ள செங்கோண முக்கோணிகள் எத்தனை? ..............




6. ஒரு கட்டம் $1cm^2$ ஆகும். எனின் நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவு எத்தனை சென்றிமீற்றர் என்பதை தசமதானத்தில் தருக? ..............................

7. 1 மணித்தியாலத்தில் 250*l* நீர் நிரம்பும் ஒரு நீர்தாங்கியில் தொடர்ந்து 4 மணித்தியாலங்கள் நீர் நிரம்பியது எனின் நீர்தாங்கி கொள்ளும் நீரின் அளவு யாது? ..............................

8. பி.ப 12.40 இற்குப் புகையிரத நிலையத்திற்கு வந்தடைய இருந்த புகையிரதம் 15 நிமிடம் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறெனில் இப்புகையிரதம் வந்தடையும் நேரம் யாது? ..............................

9. ஒரு பிள்ளைக்குத் தினமும் காலையிலும் மாலையிலும் உணவாக மூன்று விசுகோத்துக்கள் வீதம் வழங்கப்படுகின்றன. இதற்காக 72 விசுக்கோத்துக்கள் அடங்கிய பைக்கற்று எத்தனை நாளுக்குப் போதும்? ..............................

10. 

1. தரப்பட்ட திண்மமானது சதுரமுகியாகும். இதற்கு இன்னுமொரு சதுரமுகியினை அருகில் ஒட்டுவதன் மூலம் உருவாக்கப்படும் திண்மம் யாது? ..............................

2. அதற்கு எத்தனை முகங்கள் காணப்படும்? ..............................

(14) ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகின்றது. அதில் உள்ள நான்கு வெற்றிடங்களையும் நிரப்புக.

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பேனை | 5 | 18.00 | | 90 | 00 |
| பென்சில் | 3 | .............. | | 21 | 75 |
| வாழ்த்தட்டை | .............. | 09.00 | | 27 | 00 |
| அடிமட்டம் | 6 | .............. | | 90 | 00 |
| மொத்தம் | | .............. | | .............. | .............. |

(15) **டெங்கு நோயில் இருந்து பாதுகாப்புப் பெற செய்ய வேண்டிய நடவடிக்கைகள். என்ற தலைப்பில் நான்கு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்.**

..............................

..............................

..............................

..............................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு



1.30 மணி

**(1) பின்வரும் பாடலை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

1. வண்ணக்கிளி போல் பறந்திட ஆசை!
வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!
கன்னல் தமிழைக் கற்றிட ஆசை!
கடலில் மீனாய் நீந்திட ஆசை!

2. மலர்களைப் போல மணந்தர ஆசை!
மலைமேல் மலைமேல் ஏறிட ஆசை!
தளர்வோர்க்கென்றும் உதவிடஆசை!
தாய் போல் அன்பைப் பொழிந்திட ஆசை!

வெற்றி சுப திருஞானம்.

1. 'ஆசை' என்ற சொல்லின் எதிர்ச்சொல்லைத் தருக? ..............................
2. யாரைப் போல் அன்பை பொழிந்திட விருப்பம்? ..............................
3. முதலாம் பாடலில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழியைக் குறிப்பிடுக? ..............................
4. 'மலர்களை' இச்சொல்லுக்கு பொருத்தமான ஒத்தசொல்லை தருக? ..............................
5. எதன் மேல் ஏறிட ஆசை என புலவர் கூறுகிறார்? ..............................
6. மணந்தர என்ற சொல்லை பிரித்தெழுதுக? ..............................

**(2) தடித்த சொற்றொடரின் கருத்தினை தருக.**

1. நாம் நீரை **வீண்விரயமாக்காமல்** பேணிட வேண்டும். ..............................
2. நாம் ஏழை எளியவர்களுக்கு **தோள்கொடுக்கக்** கூடியவராக இருத்தல் வேண்டும். ..............................

**(3) பின்வரும் தொடர்களின் கருத்தை எழுதுக.**

1. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து ..............................
2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? ..............................
3. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த ..............................

**(4) பின்வரும் வினாக்களுக்கு விடைத்தருக.**

1. சிறுவன், சிறுமி இரு சொல்லையும் சேர்த்து அழைப்பது ..............................
2. இன்டநெற் என்பதன் தமிழ் வடிவம் ..............................

**(5) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.**

1. அம்மா நேற்று வந்தவர் யார்
2. மான் மரை யானை மாடு என்பன தாவர உண்ணிகளாகும்

**(6) சொற்களை ஒழுங்காக்கி கருத்துள்ள வசனம் ஒன்றை அமைக்குக.**

1. உண்ண / ஆரோக்கியமாக / வேண்டும் / வாழ / நாம் / போஷாக்கான / உணவுகளை

.............................................................................................

**(7) வெற்றிடத்துக்கு பொருத்தமான மிகச்சரியான சொல்லை தெரிந்து எழுதுக.** (02 புள்ளிகள்)

1. சிறு பிள்ளை ........................................................ வீடு வந்து சேராது.
   1. வேலாண்மை 2. வேளாண்மை 3. வேழாண்மை
2. ............................................ காலை விடாதே.
   1. ஆலமறியாது 2. ஆளமறியாது 3. ஆழமறியாது

(04 புள்ளிகள்)

**(8) ஒவ்வொரு தமிழ் சொல்லுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

1. வெள்ளிக்கிழமை ........................................ 2. நீலநிறம் ........................................

(04 புள்ளிகள்)

**(9) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. Please close the door ........................................ 2. I am hungry ........................................

(04 புள்ளிகள்)

**(10) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. சீணுவ கஹனவா ........................................ 2. ஸ்த்துதி ........................................

(04 புள்ளிகள்)


**(11) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. மீன்களைப் பிடித்து போடப்படும் மூலை
   1. மடி 2. கரப்பு 3. கடற்கரை 4. அத்தாங்கு

2. பின்வருவனவற்றுள் புரதக்குறைப்பாட்டு நோய்களாவன.
   1. மரஸ்மஸ் - கண்டமாலை 2. மரஸ்மஸ் - என்புருக்கி
   3. குவாசியக்கோர் - முட்டிக்கால் 4. குவாசியக்கோர் - மரஸ்மஸ்

3. ஜுலை மாதத்தில் 17ம் திகதி அமாவாசை 02ம் திகதி பௌர்ணமி எனின் அடுத்த பௌர்ணமியாக வரக்கூடிய திகதி.
   1. ஆகஸ்ட் - 17ம் திகதி 2. ஜுலை - 16ம் திகதி
   3. ஜுலை - 31ம் திகதி 4. ஆகஸ்ட் - 7ம் திகதி

4. பின்வருவனவற்றுள் விற்றமின் D சத்துள்ள உணவுத்தொகுதி
   1. மீனெண்ணெய் - முட்டை 3. வட்டக்காய் - ஈரல்
   2. முட்டை - வல்லாறை 4. நெத்தோலி - மீன்

5. 
   இவ்வுரு காட்டி நிற்பது
   1. ரந்தெனிகல நீர்தேக்கம் 2. கொத்மலை நீர்தேக்கம்
   3. விக்டோரியா நீர்தேக்கம் 4. லக்ஷபான நீர்தேக்கம்


6. தேசப்படத்தில் புகையிரதப் பாதையை குறிக்க பயன்படுத்தும் நிறம்.
   1. கபிலம் 2. மஞ்சள் 3. கறுப்பு 4. நீலம்

7. சீனி, விரைவாக கரைவது
   1. வெந்நீரில் 2. குளிரான நீரில் 3. தண்ணீரில் 4. கொண்டிஸ்நீரில்

8. இலங்கையின் ஒரேமாகாணத்தில் இருந்து இரு பிரதான ஆறுகள் கடலுக்குள்ளே பாய்கின்றன. அவையாவன
   1. களனிகங்கை - வளவேகங்கை 2. மகாவலிகங்கை - கல்லோயா ஆறு
   3. களினிகங்கை - களுகங்கை 4. ஜின்கங்கை - களுகங்கை

9. அநுராதபுரம், பொலன்நறுவை ஆகிய இரு மாவட்டங்களையும் உள்ளடங்கிய மாகாணம்.
   1. வடமாகாணம் 2. மேல்மாகாணம் 3. வடமேல்மாகாணம் 4. வடமத்திய மாகாணம்

10. வீதியை கடந்து செல்லும் போது நாம் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குமுறை
    1. வலது, இடது, வலது பார்க்க வேண்டும்
    2. இடது, வலது, இடது பார்க்க வேண்டும்.
    3. வலது பார்த்து இடது பார்த்து கடக்க வேண்டும்.
    4. இடது பார்த்து வலது பார்த்து கடக்கவேண்டும்

11. 
    மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் வீதிச்சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது.
    1. பாதுகாப்பற்ற புகையிரத கடவை வீதிக்கு முன்னால்
    2. பாதுகாப்பான புகையிரத கடவை வீதிக்கு முன்னால்
    3. முன்னால் வீதி மூடப்பட்டுள்ளது.
    4. படலையுடன் கூடிய பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை

12. வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்த உண்ண வேண்டியது.
    1. வாழைப்பழம் 2. விளாம்பழம் 3. வில்லவம்பழம் 4. மாம்பழம்


13. காந்தத்தினால் கவரப்படக்கூடியது.
    1. இரும்பாணி 2. பித்தளை ஆணி 3. செம்புத்துண்டு 4. அலுமினியத்துண்டு

14. பின்வருவனவற்றில் மைதான நிகழ்ச்சி அல்லாதது.
    1. ஈட்டி எறிதல் 2. தட்டெறிதல் 3. உயரம்பாய்தல் 4. மரதன் ஓட்டம்

15. குருநாகல் பிரதேசத்தில் அமைந்துள்ள காடு.
    1. மாதுருஓயா 2. படகமுவ 3. சிங்கராஜவனம் 4. யால

(15 புள்ளிகள்)

**(12) பின்வரும் தேசிய அலங்காரங்களுக்கு பெயர் இடுக.**

 ........................................  ........................................

(04 புள்ளிகள்)

**(13) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. ஒருவருக்கு 6 பென்சில்கள் வீதம் 660 பென்சில்களை எத்தனை பேருக்கு கொடுக்கலாம்? ....................
2. விரித்து வைக்கப்பட்ட ஓர் ஆங்கிலப் புத்தகத்தின் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 9099 ஆகும். அடுத்ததாக விரிக்கும் போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்களைக் குறிப்பிடுக? ....................
3. போத்தல் ஒன்று 1l 300ml நீரைக்கொள்ளும் இவ்வாறான 6 போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவு யாது? ....................

# சர்வதேசத்தை ஏமாற்றும் முயற்சி வெற்றியளிக்காது

அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் தொடர்ந்தும் சர்வதேசத்தை ஏமாற்றும் அரசின் முயற்சி வெற்றியளிக்காது என்று சிரேஷ்ட இராஜதந்திரி தயான் ஜயதிலக்க எச்சரித்துள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் எதிர்நிலைபபாடு மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் ஒரு புறத்தில் மாகாண சபைகளின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு முயற்சிக்கிறது. மறுபுறத்தில் அது தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கிறது. இது அர்த்தமற்ற செயல்.

அதிகாரத்தை பகிர்ந்தளித்து நாட்டில் அனைத்து இன மக்களும் நிம்மதியாக வாழ்வதற்கான வழியொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான சிறந்த வாய்ப்பொன்றை அரசாங்கம் இழந்து வருகிறது.

உள்நாட்டில் இவ்வாறான நிலையை ஏற்படுத்தி விட்டு, தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் வழங்கும் நடவடிக்கையை முன்னெடுத்திருப்பதாக சர்வதேசத்தை ஏமாற்ற அரசாங்கம் முயலுகின்றது. ஆனால் சர்வதேசத்தை தொடர்ச்சியாக அரசாங்கத்தினால் ஏமாற்ற முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

## சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் வெளியீட்டு வருமானம் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கனடாவில் வதியும் படைப்பாளியான இளங்கோ தன்னுடைய "சாம்பல் வானத்தில் மறையும் வைரவர்" என்ற இரண்டாவது புத்தகத்தைக் கனடாவில் வெளியீடு செய்தபோது கிடைத்த தொகையினை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு புத்தகங்களை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இயக்கச்சி அ.த.க. பாடசாலை, கரியாலை நாகபடுவான் அ.த.க பாடசாலை, ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு இந்தப் புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கப்படுகின்றன. மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டவும் படைப்பாளுமையை வளர்க்கவும் இந்தப் புத்தகங்கள் உதவவேண்டும்.

இரண்டாம் கட்டமாக இந்தப் புத்தகங்களை கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளரும் எழுத்தாளருமான இதயராஜன் ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் ம.உமாசங்கரிடம் 09.07.2013 அன்று பாடசாலையில் வைத்து வழங்கினார். இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்களும் பெருமளவிலான பெற்றோரும் மாணவர்களும் உடனிருந்தனர்.

## தொழில்நுட்ப திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக தமிழர்

(கொழும்பு)

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக சண்முகம் பிள்ளை பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருவினால் வழங்கப்பட்டுள்ளது.

அவர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அலுவலகத்தில் பொறுப்பேற்றுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான இவர் நாட்டின் பல பாகங்களில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

115 வருட வரலாற்றினைக் கொண்ட தொழில்நுட்ப பயிற்சி திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட முதலாவது தமிழ் அதிகாரி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் 39 தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கையடக்கத் தொலைபேசியில் தாதியை படம் பிடித்தவருக்கு விளக்கமறியல்



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தாதியொருவரை தனது கையடக்க தொலைபேசியின் ஊடாக படம்பிடித்த அந்த வைத்தியசாலையின் சுகாதாரப் பிரிவு உதவியாளரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையிலும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வைத்தியசாலையிலுள்ள தாதி ஓய்வறையில் குறித்த தாதி குளித்துக்கொண்டிருந்தபோது அறையிலுள்ள உயரமான யன்னல் ஓட்டையில் தனது கையடக்க தொலைப்பேசியை பயன்படுத்தி படம்பிடித்த சுகாதாரபிரிவு உதவியாளரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபரை, மாளிகாகந்த மேலதிக நீதவான் ரஷந்த கொட வெல முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய போதே அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொலநறுவையைச்சேர்ந்த ஜோசப் யூப் ரொசான் என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இரவு கடமையிலிருந்த தாதி கடமைகளை முடித்துக்கொண்டு இரவு 9.00 மணியளவில் தாதி ஓய்வறையில் குளித்துக்கொண்டிருந்துள்ளார். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அந்தஅறையிலுள்ள உயரமான யன்னலின் ஊடாக கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி யாரோ தான் குளித்துக்கொணடிருப்பதனை படம் பிடிப்பதை அல்லது வீடியோ ஒளிப்பதிவு செய்வதனை அவதானித்துள்ளார்.

கூச்சல் குழப்பமிடாத தாதி, திடீரென பாய்ந்து கையடக்க தொலைபேசியையை அபகரித்து விட்டார். இதனையடுத்து அது தொடர்பில் மருதானை பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் குறித்த கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி நபரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதன் போதே சந்தேகநபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



கிருஷ்ணமூர்த்தியின் "மறுவளம்" நூலுக்கான அறிமுக நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது. நூலின் பிரதியை கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், மக்கள் வங்கியின் முகாமையாளர் கந்தசாமி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். அருகில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நிற்பதையும், பார்வையாளர்களையும் காணலாம்.

## தரம் ஒன்று மாணவர்களுக்கு குடும்ப அட்டை எதற்கு?

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது தற்போது குடும்ப அட்டை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களை தரம் ஒன்றிற்கு இணைத்துக் கொள்ளும்போது குடும்ப அட்டை சமர்பிக்க வேண்டியதை தடுக்க நடவடிக்கை எடுகப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## வாஸ் குணவர்த்தனவின் புதல்வருக்கு பிடி விராந்து

(கொழும்பு)

வாஸ் குணவர்தனவின் புதல்வருக்கு பிடி விராந்து - ஏற்கனவே கைது செய்யப்பட்டார் - விசாரணை தொடர்கிறது - புலனாய்வுப் பிரிவினர்.

கொழும்பு வடக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவின் புதல்வர், ரவிந்து குணவர்தனவிற்கு எதிராக பிடிவிராந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடுவல நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.

தாக்குதல் சம்பவமொன்று தொடர்பிலான வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராகாத காரணத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் மாணவரான தனுஷ்க ராமநாயக்க மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் பம்பலப்பிட்டி வர்த்தகர் மொஹமட் சியாம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடனும் ரவிந்து குணவர்தனவிற்கு தொடர்பு இருப்பதாக புலனாய்வுப் பிரவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தின் அடிப்படையில் ரவிந்துவை ஏற்கனவே கைது செய்து விசாரணை நடத்தி வருவதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளனர்.




மானிப்பாய் நகர் லயன்ஸ் கழகத்தின் 03 ஆவது பதவியேற்பு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் லயன் சுந்தரேஸ்வரன் தலைமையில இடம்பெற்றபோது.

# சீனாவில் பாரிய மண்சரிவு; 40 பேர் புதையுண்டனர்




சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் ஏற்பட்ட மண்சரிவில் 40 பேர் வரை புதையுண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.நூற்றுக்கும் அதிகமான மீட்புப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மைய நாட்களில் சீனாவின் சில பகுதிகளில் பெய்த கடுமையான மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அங்கு மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. சிச்சுவான் மாகாணத்தில் பாலமொன்று இடிந்து வீழ்ந்ததில் காணாமற்போன 12 பேர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# நேரத்தை அளவிட துல்லியமான கடிகாரம்



நேரத்தை அளவிட மிக துல்லியமான முறையை கண்டுபிடித் துள்ளதாக பிரெஞ்சு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.கடந்த 1960ம் ஆண்டு முதல் அணுக் கடிகாரங்கள், அணுவில் ஒழுங்காக ஏற்படும் அதிர்வுகள் மூலம் செக்கன்கள் அளவிடப்படுகின்றன.

ஆனால் லேசர் ஒளியில் ஏற்படும் வேகமான அதிர்வுகளைக் கொண்டு மேலும் துல்லியமாக செக்கன்களை அளவிடும் ஒரு புதிய வகை அணுக்கடிகாரத்தை உருவாக்கி இருப்பதாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.ஆப்டிகல் லட்டைஸ் கடிகாரங்கள் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கடிகாரங்கள்,30 கோடி ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் ஒரு செக்கனை குறைவாக மதிப்பிடுமாம்.மிக, மிக துல்லியமாக நேரத்தை கணிப்பிடுவது என்பது தொலைத்தொடர்பு, செய்மதி வழிகாட்டி மற்றும் பங்குச் சந்தை செயற்பாடுகள் போன்ற தொழிற்துறைக்கு மிகவும் முக்கியமாகும்.

# அரசியலில் மாற்றத்தை மோடியால் ஏற்படுத்த முடியாது




அரசியலில் மாற்றத்தை கொண்டுவரமுடியாது என முலாயம் சிங்யாதவ் தெரிவித்துள்ளார். குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை, இந்துக்களின் புனிதத்தலமான உத்தரப்பிரதேச வாரணாசியில் நிறுத்துவதற்கு பாரதீய ஜனதா ஆலோசித்து வருகிறது. இந்நிலையில், ராம்பூர் ஜோஹர் பல்கலைக்கழக நிகழ்ச்சியில் உரையாற்றிய சமாஜ்வாத கட்சித் தலைவர் முலாயம் சிங் மோடி இது பற்றி விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

காவிக்கட்சியின் விளம்பரப்பிரியர் நரேந்திர மோடி உததரப்பிரதேசத்தில் போட்டியிட்டாலும் அவரால் இங்கு பாரதீய ஜனதா அரசியலில் அதிர்ஷ்டத்தை கொண்டு வரமுடியாது. உத்தரப்பிரதேச மக்களிடையே வித்தியாசமான மனநிலையும், கலாச்சாரமும் உள்ளது.குஜராத் அரசியலை போன்று உத்தரப்பிரதேச அரசியலை புரிந்து கொள்வது கடினம். ஒருவர் இங்கு அரசியலில் இறங்கிய பிறகே தனக்கிருக்கும் செல்வாக்கை பற்றி தெரிந்துகொள்ள முடியும்.எனவே உத்தரப்பிரதேச அரசியலில் மோடி ஒரு அரசியல் மாற்றத்தை கொண்டுவருவார் என்று என்னால் நினைக்க முடியவில்லை என மேலும் தெரிவித்தார்.

# விண்வெளி செல்ல விரும்பும் 7 வயதுச் சிறுவன்



விண்வெளிக்கு செல்ல விரும்புவதாக 7 வயது சிறுவன் ஒருவர், அறிவித்துள்ளான்.இங்கிலாந்தை சேர்ந்த 7 வயதான டெக்ஸ்டெர் என்ற சிறுவனே இவ்வாறு விண்வெளிக்கு செல்ல விரும்புவதாக அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், நாசா 2 பேரை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்போவதாக அறிந்தேன்.

அவர்களில் ஒருவராக செல்வதற்கு நான் ஆர்வமாக உள்ளேன். எனினும் தனக்கு 7 வயதே ஆகுவதாகவும் தான் ஒரு விண்வெளி வீரர் ஆக வேண்டும். அந்த சாதனையை நாசா மையத்தின் மூலம் நிகழ்த்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ள அந்த சிறுவன், அதற்கு ஆலோசனை வழங்க வேண்டும் எனவும் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது.அந்த சிறுவனின் கடிதத்திற்கு நாசாவும் பதில் அனுப்பியுள்ளதாகவும், அதில் பல ஆலோசனைகளையும் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன

# சிரியாவில் மக்கள் பட்டினி போராட்டம்





சிரியாவில் ஷியா பிரிவு அதிபர் ஆசாத்துக்கு எதிராக தீவிரவாதிகள் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக சண்டையிட்டு வருகின்றனர்.தீவிரவாதிகள் வசம் வரும் பகுதிகளை லெபனன் ஹிஸ்புல்லா இயக்கத்துடன் சேர்ந்து அதிபர் படையினர் சண்டையிட்டு வெல்வதும் நடைபெற்று வருகிறது. வர்த்தக நகரமான சிரியா அலெப்போவின் பெரும்பாலான பகுதிகளை அரசுப்படையிடம் இருந்து தீவிரவாதிகள் மீட்டனர்.இந்நிலையில், மேற்கத்திய நகரங்களில் இருந்து அதிபரின் படைக்கு வரும் ஆயுத விநியோகங்களை தடுக்கும் நோக்கில் அப்பகுதிகளில் வழியாக வந்த உணவு மற்றும் மருந்து பொருட்களுக்கு தீவிரவாதிகள் தடை விதித்துள்ளனர்.

இதனால் அலெப்போவில் மக்கள் கடும் உணவு பற்றாக்குறையை சந்தித்து வருகின்றனர். உணவு மற்றும் மருத்து பொருட்கள் தட்டுப்பாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் தீவிரவாதிகளுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.அப்போது ஒரு போராட்டுக்காரரை தீவிரவாதிகள் சுட்டதாகவும் மனித உரிமை அமைப்பு எச்சரித்துள்ளது. அங்கு உணவு மற்றும் மருந்து பொருட்கள் அனுப்பப்படுவதை பாதுகாக்க உலக சுகாதார அமைப்பும் கேட்டுக்கொண்டுள்ளது.

# ரோந்து செல்வதை நிறுத்த முடியாது

## சீனா திட்டவட்டம்



(பீஜிங்)

இந்தியாவை ஒட்டியுள்ள எல்லைப் பகுதியில், வழக்கமான ரோந்து பணியில் ஈடுபடும் திட்டத்தை, மாற்றிக் கொள்ள முடியாது என, சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீனாவுக்கும், இந்தியாவுக்கும், நீண்ட காலமாக எல்லைப் பிரச்சினை உள்ளது.கடந்த, ஏப்., 20ஆம் திகதி, ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின், லே பகுதியில் நுழைந்த, சீன இராணுவ வீரர்கள், 21 நாட்கள் அங்கேயே முகாமிட்டு, எல்லையில் பதற்றத்தை ஏற்படுத்தினர்.இந்நிலையில், லே பகுதியின் மற்றொரு இடமான, சுமர் என்ற இந்திய கிராமம் அருகே, சீன இராணுவம் அத்துமீறி நுழைந்து, அட்டூழியம் புரிந்துள்ள தகவல் வெளியாகியுள்ளது.இரு நாடுகளுக்கும் இடையே, எல்லைப் பிரச்சினை இருப்பதால், சுமர் பகுதியில், இந்திய இராணுவம், கேமராக்களை பொருத்தி, சீன இராணுவ நடவடிக்கைகளை கண்காணித்து வருகிறது. அது போல், அங்கு பல பதுங்கு குழிகளையும் அமைத்துள்ளது.கடந்த, 17ஆம் திகதி, அங்கு வந்த சீன இராணுவத்தினர், கேமரா ஒயர் இணைப்புகளை துண்டித்து, பதுங்கு குழிகளை தகர்த்து, அட்டூழியம் புரிந்துள்ளனர். இது குறித்து, சீன வெளியுறவு அமைச்சக அதிகாரி "ஹவா கூறியதாவது: இந்தியாவை ஒட்டியுள்ள சீன எல்லை பகுதியில், வழக்கமான ரோந்து பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இதில் மாற்றம் ஏதும் செய்ய முடியாது. தற்போது அங்கு என்ன நடந்துள்ளது, என்ற விவரம் எனக்கு தெரியாது. எல்லை விவகாரத்தில், அமைதியையும், ஒத்துழைப்பையும் அளிக்கவே சீனா விரும்புகிறது. இவ்வாறு, "ஹவா கூறினார்


# 7 நாட்களில் மும்பை அழியும்; டுவீட்டர் தகவலால் பரபரப்பு



மும்பை நகரமானது இன்னும் 7 நாட்களில் அழிந்து விடும் என்று டுவிட்டரில் வெளியிடப்பட்ட செய்தியால் மக்களிடையே பெரும் பதற்றம் நிலவி வருகின்றது.இந்தியன் முஜாஹிதீன் அமைப்பானது 7 நாட்களில் மும்பை மாநகரில் தாக்குதல் நடத்துவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.மேலும் அண்மையில் நிகழ்த்தப்பட்ட பீகார் மாநிலம் புத்த கயா வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பு ஏற்பதாக இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு அறிவித்திருக்கின்றது.

அந்த அமைப்பின் டுவிட்டர் பக்கத்தில் புத்த கயாவில் 9 வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தது நாங்களே என்று பதிவிடப்பட்டிருக்கின்றது.அதே போல் எங்களது அடுத்த நோக்கமானது மும்பை நகரம்தான். உங்களால் முடிந்தால் தடுக்கலாம். 7 நாட்களுக்குப் பின்னர்.....என்று பதிவிடப்பட்டுள்ளது.இதனைத் தொடர்ந்து டுவிட்டரிடம் இந்திய முஜாஹிதீன் பெயரில் யார் பதிவு செய்திருப்பது? பதிவு செய்யப்பட்ட கணனியின் ஐபி எண் என்ன? என்பது உள்ளிட்ட விபரங்கள் கோரப்பட்டுள்ளன.மேலும் இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு தான் அந்த பதிவைப் போட்டதா? அல்லது போலியாக யாரும் பதிவிட்டிருக்கிறார்களா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.

# அக்கரை மக்களின் காணிகள் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்படும்





(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு அக்கரை கிராமத்தில் மீளக் குடியேறும் மக்களுக்கான காணிகளை ஒரு மாத காலத்திற்குள் சட்டபூர்வமாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளை, குடிநீர் வசதியை பெற்றுக் கொடுப்பதற்கும் அங்குள்ள மண் அணையை அகற்றுவதற்கும் துறைசார்ந்தோர் ஊடாக துரித நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இடைக்காடு அக்கரைக் கிராமத்தை மீள்குடியேற்றத்துக்காக மக்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நேற்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீங்கள் நீண்டகாலமாக ஏக்கத்தோடும் கவலையோடும் காத்திருந்து இன்று இந்தப் பகுதியில் மீளக்குடியேறும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. நீங்கள் என்னிடம் வரும்போது பொருத்தமான காலத்திற்காகக் காத்திருங்கள் என்றும் அப்போது நிச்சயம் உங்கள் பகுதியை மீளப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறி வந்தேன்.

இதை நம்பவிடாது இப்பிரச்சினையையும் தீராப்பிரச்சினையாக வைத்திருக்கும் சுயலாப அரசியல்வாதிகள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு உங்களை குழப்பி வந்தனர். நடைமுறைச்சாத்தியமான விடயங்களையே நாம் செய்து வருகின்றோம். ஆனால் ஏனைய சுயலாப அரசியல்வாதிகளோ உங்களை நம்பவிடாது எதையெதையோ கூறி எல்லாபிரச்சினைகளையும் தீராப்பிரச்சினையாக வைத்துக்கொள்ளவே விரும்புகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இன்னும் ஒரு மாதகாலத்தில் உங்களுக்கான காணிகள் இனங்காணப்பட்டு அவற்றை சட்டபூர்வமாக உறுதிப்படுத்தி அதற்கான உறுதிப் பத்திரங்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைககள் முன்னெடுக்கப்படும் என்பதுடன், உங்களுக்குரிய காணிகளை இனங்கண்டு அவற்றை இன்று முதல் துப்புரவு செய்ய முடியுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே மக்களுக்குத் தேவையான உதவிகள் வடமாகாண சபையூடாக செய்யப்படும் அதேவேளை, குறைந்தது அரைவாசி குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலம் வீடுகள் கிடைக்கவும், கடற்றொழிலை மேற்கொள்ளும் வகையிலும், ஏனைய தொழில் மேம்பாட்டுக்காகவும் தொழிற்துறை உபகரணங்கள் வழங்கப்படுவதுடன், அக்கரை கடற்பிரதேசத்தில் வான் அகழ்வு செய்வதற்கும் இப்பகுதியை படைத்தரப்பினர் ஊடாக துப்பரவு செய்வதற்கும் இப்பகுதியில் பயன்தரு மரக்கன்றுகளை நடுகை செய்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன், மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பிளாஸ்ரிக் கொள்கலன்கள் ஊடாக குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கும், முன்பள்ளி அமைப்பது, மின்சாரம் பெற்றுக் கொடுப்பது, உள்ளக வீதிகள் புனரமைப்பு போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டு அவை உரிய காலத்தில் நிவர்த்தி செய்யப்படுமென்றும் சுட்டிக்காட்டினார்.

## தெரிவுக்குழுவின் பரிந்துரைகளுக்கு மக்கள் கருத்தறிவது அவசியம்

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டால், மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றுக்கும் செல்ல நேரிடும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

ஜனநாயக முறையின் அடிப்படை சந்தர்ப்பமான தெரிவுக் குழுவில் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் என்ன திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்ற போதிலும், தெரிவுக்குழு முதற் தடவையாக கடந்த 9 ஆம் திகதி கூடியது. ஆனாலும் அதில மக்கள் கருந்த்தறியும் வாக்கெடுப்பு குறித்து கருத்துக்கள் இன்னும் முன்வைக்கப்படவில்லை.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக பொது இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு மிகவும் சிறந்த மேடை என ஜனாதிபதி, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் நடைபெற்ற சந்திப்பின் போது கூறியுள்ளார். இதனை இந்தியா வரவேற்று பாராட்டியுள்ளது. தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்து கொள்ள வேண்டும் என இந்தியா அழைப்பு விடுத்துள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

### 13 ஐ அமுல்...

இது விடயமாக இலங்கை தரப்பிலும் என்ன எல்லாம் சொன்னார்கள் என்பது பற்றி ஊடகங்களில் பலவாறு வெளிவந்தன. அதைப் பற்றி நான் கூற வரவில்லை. ஆனால் இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டம் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் 13++ என்று முன்னர் இங்கு வந்த வெளியுறவு அமைச்சரும் கூறியிருந்தார். இதையே தற்போதுள்ள வெளியுறவு அமைச்சரும் கூறியிருக்கின்றார்.

எனவே இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை என துணைத்தூதுவர் தெரிவித்தார். (இ)

### மக்களின்...

அது சந்திக்கும் என்றும், இதில் ஆர்வம் உள்ள தனிநபர்கள், அரசியல் கட்சிகள், சிவில் மற்றும் மத அமைப்புக்கள் தமது கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை ஆகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வரை தரலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### முதல்வர்...

சங்கையா, கிருஷ்ண பிள்ளை, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், சர்வேஸ்வரன், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சிறீகாந்தா, ஹென்ரி மகேந்திரன், கருணாகரன், புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், க.சிவநேசன் (பவன்), ராகவன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

### 3 மாகாண...

இம்மாதம் 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரையில் கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அத்துடன் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து 5 அல்லது 8 வாரங்களில் தேர்தல் நடத்தப்படும் எனக் கூறப்படுகிறது.

தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நேற்றுப் பிற்பகல் தேர்தல் செயலகத்தில் நடைபெற்றதாக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடமாகாண மாணவர்களின் பெறுபேறுகள் சிறப்பானவை

(திருநெல்வேலி)

வடமாகாண மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் சிறப்பானவையாகும். கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகம், கலை போன்ற பாடங்களில் அவர்களது சித்தி விகிதம் பாராட்டப்பட வேண்டியது. இன்று ஆரம்பித்து வைக்கப்படும் இம் மூன்றுநாள் செயலமர்வின் மூலம் உயர்தர வகுப்பு மாணவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான மூன்றுநாள் செயலமர்வினை ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்தும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். கல்லூரி மணடபத்தில் அதிபர் எஸ்.கைலாய பிள்ளை தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், மகிந்த சிந்தனையின் கீழ் பல உதவிகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பல பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் ஆரம்பிப்பதற்கான உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன. கட்டடங்களுக்கான அத்திவாரக் கல் நாட்டப்பட்டுள்ளது. எமது மாணவர்கள் சகல பாடங்களிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

கல்வியின் மகத்துவத்தை அறிந்து மாணவர்கள் கல்வியில் முழுக் கவனத்தை செலுத்த வேண்டும். கடந்த க.பொ.த சாதாரணதர பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டமும் சிறந்த முன்னேற்றத்தை வெளிப்படுத்தியது.

மாணவர்கள் தமது தொழில்நுட்ப அறிவை நன்கு விருத்தி செய்து கொள்வதன் மூலம் அவர்களது ஆற்றலை வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஜனாதிபதி மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். கல்விக்கான சகல உதவிகளையும் அவர் வழங்கியுள்ளார்.

மாணவர்களின் கல்வியில் சிறந்து விளங்கி தமக்கும் தம்மைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கும் நாட்டுக்கும் நற்பிரஜைகளாக வாழ்ந்து காட்டல் வேண்டும் எனக் கூறினார்.

இந்நிகழ்வில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார், பிரதிப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (137)

### பஸ்கட்டண...

இதேவேளை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நேற்றுக் காலை தனியார் பேருந்துச் சங்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த வேளை சேவையில் ஈடுபட்ட ஓரிரு பேருந்துகள் மீது இனந்தெரியாதோர் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை சாவகச்சேரி, மாம்பழம் சந்தி மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்துகள் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் பேருந்துகள் சேதமடைந்தன. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பேருந்து மீது ஆரியகுளம் சந்திக்கருகில் நடத்தப்பட்ட தாக்குதலில் பேருந்தின் சாரதியான மனோகரன் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் செலுத்திவந்த பேருந்தும் சேதமடைந்தது.

எனினும் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பேருந்துகளுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். நேற்றுக்காலை பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் வேலை செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். எனினும் காலை 10.00 மணியுடன் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவுக்கு வந்ததையடுத்து போக்குவரத்து நெருக்கடி குறைந்தது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து யாழ். தனியார் போக்குவரத்து சங்க முகாமையாளர் ரட்ணசபாபதியிடம் கேட்டபோது இச்சம்பவத்திற்கும் எமக்கும் தொடர்பில்லை. விசமிகள் இதனை மேற்கொண்டிருக்கலாம். வேண்டாதவர்கள் செய்திருக்கலாம். இத்தாக்குதல் சம்பவம் கண்டிக்கத்தக்கது என அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலும் இச்சேவைகள் காலை 10.00 மணிக்குப் பினனர் வழமைக்குத் திரும்பியதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ,116)

### 27 வருடங்களின்...


தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் அமைக்கப்பட்டிருந்த வீடுகள் யாவும் முற்றாக அழிவடைந்த நிலையில் அப்பகுதி தற்போது காடு மண்டிக்காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பகுதியை துப்புரவு செய்வது, உள்ளக வீதிகளின் புனரமைப்பு, வீட்டுத்திட்டம், மின்சாரம், குடிநீர்வசதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் அவதானங்களைச் செலுத்தியுள்ளனர்.

குறித்த பகுதியை மீள்குடியேற்றத்துக்காக உத்தியோகபூர்வமாக கையளிக்க அரும்பாடுபட்டு உழைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மக்கள் தமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

இதில் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மாவட்ட உதவிச் செயலாளர் சுதர்சன், வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, 515 ஆவது கட்டளைத் தளபதி கேணல் மானகே, ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜங்கரன், ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலி பிரதேச இணைப்பாளர் தர்மராசா ஆகியோர் உடனிருந்தனர்.

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், மனித உரிமைகளை பேணுவதிலும் உரிய கவனம் செலுத்தப்படுவதாகவும் கூறினார்.

நாடாளுமன்ற ஒன்றியங்களின் மனித உரிமைகளுக்கான பிரதிநிதிகள் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் நீதியமைச்சர் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்து இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைவரம் குறித்து வினவிய போதே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஒன்றியங்களின் மனித உரிமைகளுக்கான பிரதித் தலைவர் செனட்டர் ஜூஆன் பப்லோ லெடிலியர், அவ்வமைப்பின் மற்றுமொரு உறுப்பினரான செனட்டர் பிரான்ஸிஸ் பங்கிலினன் ஆகியோர் உட்பட்ட குழுவினர் இதில் கலந்து கொண்டு, உரிய விளக்கங்களை பெறுவதற்காக அமைச்சரிடம் சில கேள்விகளை எழுப்பினர்.

யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்களாகியும் நாட்டின் மனித உரிமைகள் விவகாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவற்றையும் காண முடியாதிருப்பதாகக் கூறப்பட்ட போது பதிலளித்த அமைச்சர், மூன்று தசாப்த காலமாக நீடித்த போர் ஓய்ந்துவிட்ட போதிலும். அதனால் பாதிப்புக்குள்ளான நாட்டின் வடகிழக்கு மாகாணங்களில் சகஜ நிலையும், இயல்பு வாழ்க்கையும் படிப்படியாக ஏற்பட்டு வருவதால் இயன்றவரை மக்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்தி, அவர்களின் உரிமைகளை பேணுவதில் கவனம் செலுத்தப்படுகின்றது என்றார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் விடயம் தொடர்பிலும் அவர்கள் கேள்வி எழுப்பிய பொழுது, அந்த விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டிய பொலிஸாருக்கு உரிய பயிற்சி வழங்குவதிலும் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

சிறைக் கைதிகள் தொடர்பிலும், காணாமல் போனோர் தொடர்பிலும் தகவல்களை அறிந்து கொள்வதிலும் இக்குழுவினர் அதிக ஆர்வம் செலுத்தினர்.

பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சியமளிப்போரையும் பாதுகாப்பதற்கான ஒரு சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் ஊடாக, அச்சுறுத்தல்களுக்கு ஆளாகாமல் நீதிமன்றங்களில் தம்து தரப்பு நியாயங்களை முன்வைப்பதற்கு வழக்காளிகளுக்கும், சாட்சிகளுக்கும் வாய்ப்புகளும், வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப் படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# கரைத்துறைப்பற்றுக்கு பதில் பிரதேச செயலர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக தீபால் நிசாந்த சிறிமான்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

தனிநபர் ஒருவரின் காணிப் பிரச்சினை தொடர்பான மேலதிக விளக்கங்களை கோருவதற்காக கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளராக இருந்த பி.குகநாதன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, வெலிஓயா பிரதேச செயலாளரான தீபால் நிசாந்த சிறிமான்ன பதில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# நிஷாந்தன் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

வானின் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், வானை தீமூட்ட முயற்சித்த குற்றச்சாட்டில் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சிறிகரன் நிஷாந்தனை 14 நாள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் உத்தரவிட்டார்.

யாழ். கோவில். வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு அத்துமீறி நுழைந்து வீட்டின் முன்பாக நின்ற வான் மீது கல் வீசித்தாக குதல் மேற்கொண்டதாகவும் அதேவேளை வானை தீமூட்ட முயற்சித்ததாகவும் கூறி வீட்டின் உரிமையாளரினால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதன் பிரகாரம் நேற்றுக் காலை யாழ். பொலிஸாரினால் நிஷாந்தன் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸ் விசாரணையினை தொடர்ந்து இவர் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை, யாழ். நீதிவான் நீதிமன்ற நீதவான் பொ. சிவகுமார் இவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (25)

# கிளி, முல்லையில் 4 தேசிய பாடசாலைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நான்கு தேசியப் பாடசாலைகளை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

இதற்கமைய, கிளிநொச்சி மத்திய கல்லூரி, முழங்காவில் மத்திய கல்லூரி, முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மற்றும் மல்லாவி கல்லூரி ஆகியன தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன.

# தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்த ஸ்கந்தா மாணவர்களுக்கு வரவேற்பு



(சுன்னாகம்)

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தமிழ் தின நாடகப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றி பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கும் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து திரும்பிய மாணவர்கள் மற்றும் நெறியாள்கை செய்த ஆசிரியர்களும் நேற்றுக்காலை பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களாலும் பழைய மாணவர்களினலும் சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டர் முன்றலில் இருந்து மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டு கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்துச் செல் லப்பட்டார்கள்.

கல்லூரியின் மேலைத்தேய பாண்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்பு மரியாதையுடன் காங்கேசன்துறை வீதி, டாக்டர் சுப்பிரமணியம் வீதி வழியாக சென்று பாடசாலையை அடைந்தனர். அங்கு அவர்களுக்கு பாராட்டு நிகழ்வும் இடம்பெற்றது.

# பொருளாதார மேம்பாடே தமிழ் மக்களுக்கு அவசியம்

## - பிரிவினை வேண்டாம் என்கிறார் ஹத்துருசிங்க

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள், பிரிவினை வாதிகளுக்கு துணைபோகாது தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இராணுவம் நிலைகொண்டிருந்த வளலாய், அக்கரை கிராமம் பொது மக்களின் மீள்குடியேற்றத்திற்காக இராணுவத்தினரால் நேற்று விடுவிக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யுத்தம் முடிந்த பின்னர் மக்கள் அவரவர் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுவதையிட்டு ஒரு இராணுவ வீரன் என்ற வகையில் நான் பெருமையடைகின்றேன்.

இந்த மக்களின் தேவைகளை நன்கு உணர்ந்து கொண்டு அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோர் சேவையாற்றி வருகின்றனர். யுத்தம் முடிந்த பின்னரான இவர்களின் சேவைகள் எதிர்காலத்திலும் இம்மக்களுக்கு தேவை. மீள் குடியேற்றப்பட்ட மக்களிற்கு



தேவையான உதவிகள் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திக்கு தேவையான உதவிகளை வழங்க இராணுவத்தினர் தயாராக உள்ளனர்.

இந்த நிலையில், தமிழ் மக்கள் பிரிவினைவாதிகளுக்கு துணைபோகாது உங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

**புத்தகாயா தாக்குதலை வைத்து**

# முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்க மாட்டாது அரசு

(கொழும்பு)

பீகார் மாநிலத்தில் உள்ள புத்தகாயாவில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒரு முஸ்லிம் அமைப்பு சம்பந்தப்பட்டிருப்பதை சாட்டாக வைத்து இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகளை அரசு அனுமதிக்காதென அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

வேறு ஒரு நாட்டில் நடைபெறும் ஒரு சம்பவத்தை இலங்கையுடன் இணைத்து வீண் பிரச்சினைகளை ஏற்படுத்துவதில் சில இணையத்தளங்கள் ஈடுபட்டுவருவது எமது கவனத்துக்கு கெண்டுவரப்பட்டது.

அச்சம்பவத்தை வைத்துக் கொண்டு இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசாங்கம் இடமளிக்காது என்றும் கூறினார்.

## ஆஷஸ் தொடர்

**இரண்டாம் நாள் ஆட்டம்**

அவுஸ்ரேலியா: 280 ஓட்டங்கள்
அன்டர்சன்: 05 விக்கெட்டுக்கள்

இங்கிலாந்து: 80/2
ஆட்டமிழக்காமல்:
அலிஸ்ரர்குக்: 37 பீற்றர்சன்: 35

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.